ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப்ரபந்நஜநகூடஸ்தரான

நம்மாழ்வார் அருளிச்செய்த

திருவாசிரியம்.

பெருமாள் கோயில்

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்

இயற்றிய

திவ்யார்த்த தீபிகையென்னும்

உரையுடன் கூடியது.

M. R. கோவிந்தசாமி நாயுடுவால்

சென்னை ஆடன் அச்சுக்கூடத்தில்

அச்சிடுவிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

1928

ஸ்ரீமான் உ. வே. (காஞ்சீபுரம்) ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமிகள் அருளிச்செய்த க்ரந்தங்களும் அவற்றின் விலையும்.

திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி —தெளிவுரை	3	0	0
திருப்பாவையின் விரிவுரை	1	4	0
ஷை திக் ராப்பர் பயிண்ட்	1	0	0
நாச்சியார் திருமொழியின் விரிவுரை	2	0	0
பெருமாள் திருமொழியின் விரிவுரை	1	12	0
திருச்சந்த விருத்தத்தின் விரிவுரை .	1	10	0
திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு—இவற்றின் விரிவுரை	1	6	0
முதலாயிரம் முழுமையும் 3 வால்யூம்களாக நல்ல பைண்ட்	10	8	0
இராமாநுச நூற்றந்தாதியின் விரிவுரை	0	12	0
சிறிய திருமடல்—விரிவுரை	0	10	0
பெரிய திருமடல்—விரிவுரை	1	0	0
திருவெழுகூற்றிருக்கை—விரிவுரை	0	5	0
திருவாசிரியம்—விரிவுரை	0	5	0
பெரிய திருவந்தாதி	1	8	0
ஸ்ரீவசநபூஷண ஸாரம்	1	0	0
கூரத்தாழ்வான் வைபவம்	0	4	0
பிரதிவாதி பயங்கரம் அண்ணா வைபவம்	0	3	0
முகுந்தமாலையின் தெளிவுரை	0	6	0
ஆளவந்தார் ஸ்தோத்ரத்தின் தெளிவுரை ..	0	12	0
ப்ரணவாதிகார தத்துவம்	0	4	0
நமஸ்கார தத்துவம்	0	2	0
ஸ்தோத்ரவ்யாக்யான சோதநம்	0	3	0
ஸுதர்சந சதகம் தமிழுரை	1	0	0
ஸ்ரீவரதராஜ ஸ்தவத்தின்—விஸ்தாரமான மணிப்ரவாள வியாக்கியானம் (தெலுங்கு) லிபி	1	4	0
ஸ்ரீஸ்தவத்தின் ஷை ஷை ..	1	6	0
அதிமாநுஷ ஸ்தவத்தின் ஷை ஷை ...	0	12	0
திருப்பல்லாண்டு விரிவுரை . ஷை	0	4	0
ஆசார்ய ஹ்ருதய மூலம் ஷை	0	3	0
ரஹஸ்ய மூலம் ஷை	0	6	0
உபந்யாஸரத்நமாலா (க்ரந்தலிபி) ஸம்ஸ்க்ருத பாஷையில் சிறந்த 5 உபந்யாஸங்கள்	0	6	0
சேஷாவதாரச் சிறப்பு	0	2	0

[இன்னும் பல புத்தகங்களும் உள்ளன.]

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாசிரியம்.

இது—மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுள் தலைவரும், ப்ரபந்நஜநகூடஸ்தருமான நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு திவ்யப்ரபந்தங்களுள் இரண்டாவதான பிரபந்தம். திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு பிரபந்தங்களும் நம்மாழ்வாருடைய ' திவ்யஸூக்திகளாம். இந்நான்கும், முறையே நான்கு வேதங்களின் ஸாரமாம். நாலாயிரப் பிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாகிய இயற்பாவில் இது ஆறாவதாகும். யஜுர்வேத ஸாரமுமாம்.

ஆழ்வார் தமது ஞானக்கண்ணுக்கு இலக்கான எம்பெருமானை நோக்கி, 'தேவரீரை அநுபவிப்பதற்கு இடையூறான தேஹஸம்பந்தத்தை அறுத்துத் தந்தருளவேணும்' என்று ஸம்ஸார ஸம்பந்த நிவ்ருத்தியை அபேக்ஷித்தார்—முதற் பிரபந்தயாகிய திருவிருத்தத்தில். ஆழ்வார் அப்படி பிரார்த்தித்தபோதிலும், எம்பெருமான் இவ்வாழ்வாரைக்கொண்டு நாட்டுக்கு நன்மையாகச் சில திவ்யப்ரபந்

தங்களை வெளியிடுவித்து ஸம்ஸாரிகளைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம் பற்றினவனாகையாலே "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமிந்நின்ற நீர்மை இனியாமுறாமை' என்று இவர் அபேக்ஷித்த போதே இவருடைய பிரார்த்தனையைத் தலைக்கட்டித் தந்தருளவில்லை. "இவ்வாழ்வார் இந்த ஸம்ஸாரத்தை விட்டு விலகி ஒரு *நலமந்தமில்லதோர் நாட்டிலே போய்ச் சேரவேணுமென்று பாரிப்பது நம்முடைய குணங்களை அநுபவிப்பதற்காகவேயன்றி வேறொன்றுக்காகவன்றே; அந்த குணாநுபவத்தை இவர்க்கு நாம் இவ்விடத்திலேயே வாய்க்கச்செய்வோம்; இங்கே தானே இவர் குணாநுபவம் பண்ணிக் களித்தாராய், அவ்வநுபவம் உள்ளடங்காமல் புறவெள்ளமிட்டுப் பிரபந்தங்களாகப் பெருகி லோகோபகாரமும் செய்தாராகட்டும்" என்று எம்பெருமான் திருவுள்ளம்பற்றித் தனது ஸ்வரூப ரூபகுண விபூதிகளைக் காட்டிக்கொடுக்க, ஆழ்வார் அவற்றைக்கண்டு பரமாநந்தம் பொலிய அநுபவிக்கிறார்-இத்திருவாசிரியத்தில். ஸம்ஸார ஸம்பந்தங் கழிந்து பரமபதத்திலே போனபின்பு அநுபவிக்கக்கூடிய எம்பெருமானது மேன்மையையும் நீர்மையையும் வடிவழகையும் இங்கிருந்து கொண்டே சுருக்கமாக ஏழு பாட்டாலே அநுபவிக்கிறாராயிற்று.

ஆசிரியப்பாக்களினாலமைந்த இத்திவ்யப்ரபந்தத்திற்குத் திருஆசிரியம் எனத் திருநாமம் வழங்கலாயிற்று. அடியொன்றுக்கு நான்கு சீராய் இயற்சீர் பயின்றும் வெண்சீர் விரவியும் மூன்றடிக்குக் குறையாமல் பலவடிகளால் அகவலோசையுற்று இறுதியில் ஏ யென்னும் அசையுடன் முடிவதுஆசிரியப்பாவாம். இது—நேரிசையாசிரியப்பா, நிலைமண்டில வாசிரியப்பா முதலிய நான்கு வகைகளையுடையது; எல்லாவடிகளும் நாற்சீராய் ஈற்றயலடி முச்சீராய் முடிவது நேரிசையாசிரியப்பா. எல்லாவடிகளும் நான்கு சீராலேயே முடிவது நிலைமண்டிலவாசிரியப்பா. இப்பிரபந்தத்தில் 1,2,3,6-ஆம் பாசுரங்கள் நேரிசையாசிரியப்பாக்கள்; 4, 5, 7-ஆம் பாசுரங்கள் நிலைமண்டில வாசிரியப்பாக்கள். அந்தாதித்தொடையால் அமைந்ததாம் இப்பிரபந்தம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

தனியன் உரை.

அருளாளப்பெருமாளெம்பெருமானுர் அருளிச்செய்தது.

[கலி விருத்தம்.]

காசினியோர் தாம்வாழக் கலியுகத்தே வந்துதித்து
ஆசிரியப் பாவதனு லருமறைநூல் விரித்தானைத்
தேசிகனைப் பராங்குசனைத் திகழ்வகுளத் தாரானை
மாசடையா மனத்துவைத்து மறவாமல் வாழ்த்துதுமே.

பதவுரை

காசினியோர் தாம்	பூலோகத்திலுள்ளவர்கள்
வாழ	உஜ்ஜீவிப்பதற்காக
கலியுகத்தே	இக்கலியுகத்தில்
வந்து உதித்து	இந்நிலத்தில் வந்து அவதரித்து
ஆசிரியப்பா அதனுல்	திருவாசிரியப் பிரபந்தத்தினுல்
அரு மறை நூல் விரித்தானை	தெரியவரிதான வேத சாஸ்த்ரங்களை விவரித்த வரும்
தேசிகனை	ஆசார்யரும்
திகழ் வகுளம் தாரானை	விளங்குகின்ற மகிழ்மாலையை அணிந்துள்ள வருமான
பராங்குசனை	நம்மாழ்வாரை
மாசு அடையா மனத்து வைத்து	அஹங்கார மமகாரங்களாகிற குற்றங்களற்ற மனத்திலே வைத்து
மறவாமல்	ஒருகாலும் மறவாமல்
வாழ்த்துதும்	மங்களாசாஸநஞ் செய்வோம்.

—***—இவ்விருள் தருமாஞாலத்திலே ஸம்ஸாரிகளாய்த் தடுமாறுகிற நம்போல்வாரை உஜ்ஜீவிக்கச் செய்வதற்காக இக்கலியுகத்திலே இப்பூமண்டலத்திலே வந்து திருவவதரித்துத் திருவாசிரிய

மென்னுமித் திவ்யப்ரபந்தத்தை அருளிச்செய்து இதன் மூலமாக வேதார்த்தங்களை வெளியிட்டவரும், "ஆத்யஸ்ய ந: குலபதே:" என்று ஆளவந்தாரருளிச்செய்தபடி ஸ்ரீவைஷ்ணவகுல கூடஸ்தராய்க்கொண்டு ப்ரதமாசார்யரும், மகிழ்மாலையை நிரூபகமாகச் சாத்திக்கொண்டிருப்பவரும், புறமதத்தவர்களைக் கண்டித்து ஒழித்ததனாலே பராங்குசர் என்று திருநாமம் பெற்றவருமான நம்மாழ்வாரை நிஷ்கல்மஷமான நெஞ்சிலேவைத்து நித்தியம் வாழ்த்துவோமென்றதாயிற்று.

பராங்குசன் என்பதற்கு மானுனிகள் சொல்லும் அர்த்தமும் ஒன்றுண்டு; பரர்கட்கு அங்குசம் [மாவட்டி] போன்றவர்,—மதாந்தரஸ்தர்களை அடக்குகிறவர் என்கிற பொருள் ஒருபுறமிருக்கட்டும். பரன் என்று பரமபுருஷனை எம்பெருமானைச் சொல்லுகிறது. அவனைத் தம்முடைய ஸ்ரீஸூக்திகளாகிற மாவட்டியினால் வசப்படுத்திக்கொள்ளவல்லவர் என்கை. * "வலக்கையாழி இடக்கைச் சங்கமிவையுடை மால்வண்ணனை, மலக்கு நாவுடையேற்கு" என்று தாமே அருளிச்செய்தார். சில குத்ருஷ்டிகள் மறைகுலையச் சாதுசனங்களடங்கத் தருக்கச் செருக்காலே எம்பெருமானுடைய பரத்வத்தை இல்லைசெய்தவளவிலே ஸர்வேசவரன் அதுகண்டு நடுங்கி 'நான் பரதத்வமல்லேன், நான் பரதத்வமல்லேன்' என்று பின்வாங்க, ஆழ்வார் "ஒன்றுந்தேவுமுலகும்" என்கிற திருவாய்மொழியாகிற மாவட்டியையிட்டு அவ்வெம்பெருமானாகிற களிற்றை ஓடவொட்டாதே நிலைநிறுத்திப் பரத்வஸ்தாபனம் பண்ணினபடியாலே பராங்குசரென்கிறது என்று கருத்து.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

* திருவாய்மொழி 6-4-9

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ப்ரபந்நஜநகூடஸ்தரான நம்மாழ்வார் அருளிச்செய்த

திருவாசிரியம்.

[பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
திவ்யார்த்த தீபிகையுடன் கூடியது.]

செக்கர்மா முகிலுடுத்து மிக்க செஞ்சுடர்ப்
பரிதிசூடி * அஞ்சுடர் மதியம்பூண்டு *
பலசுடர் புனைந்து பவளச்செவ்வாய் *
திகழ் பசுஞ்சோதி மரதகக் குன்றம் *
கடலோன் கைமிசைக் கண்வளர்வதுபோல் * *
பீதகவாடை முடிபூண் முதலா *
மேதகு பல்கலனணிந்து * சோதி
வாயவும் கண்ணவும் சிவப்ப * மீதிட்டுப்
பச்சைமேனி மிகப்பகைப்ப *
நச்சுவினைக் கவர்தலை யரவி னமளியேறி *
எறிகடல் நடுவு ளறிதுயி லமர்ந்து *
சிவனய னிந்திர னிவர்முத லனைத்தோர் *
தெய்வக் குழாங்கள் கைதொழக் கிடந்த *
தாமரையுந்தித் தனிப்பெரு நாயக ! *
மூவுலகளந்த சேவடியோயே ! (க)

பதவுரை.

பவளம் செம் வாய்	பவழங்களாலே சிவந்த இடங்களை யுடையதும்	திகழ் பசும் சோதி	விளங்குகின்ற பசுமையான நிறத்தை யுடையதுமான

மாதகம் குன்றம் — ஒரு பச்சை மாமலையானது,

செக்கர் மா முகில் உடுத்து — சிவந்த பெரிய மேகத்தை அரையில் உடுத்துக் கொண்டும்

மிக்க செம் சுடர் பரிதி சூடி — மிகவும் சிவந்த தேஜஸ்ஸை யுடைய ஸூர்யனை சிரஸ்ஸில் அணிந்து கொண்டும்

அம் சுடர் மதியம் பூண்டு — குளிர்ந்த ஒளியை யுடைய சந்திரனைக் கண்ட பூஷணமாக அணிந்து கொண்டும்

பல சுடர் புனைந்து — (நக்ஷத்திரங்களாகிற பல தேஜஸ் பதார்த்தங்களையும் (பலவகை ஆபரணங்களாக) அணிந்து கொண்டும்

கடலோன் கை மிசை — கடலரசனுடைய கைமேலே

கண்வளர்வது போல் — படுத்துக்கொண் டிருப்பதுபோல,

பீதக ஆடை முடி பூண் முதலா மேதகு பல் கலன் அணிந்து — பீதாம்பரம், திருவபிஷேகம் கண்டிகை முதலான சிறந்த பல திருவாபரணங்களைச் சாத்திக்கொண்டு

சோதி வாயவும் கண்ணவும் சிவப்ப — அழகிய வாயும் கண்களும் சிவந்திருக்கப் பெற்று

பச்சை — பசுமையான

மேனி — திவ்யமங்கள விக்ரஹத்தின் நிறமானது

மீதிட்டு மிக பசைப்ப — மற்ற ஒளிகளெல்லாவற்றிற் காட்டிலும் மேலோங்கி மற்ற ஒளிகளோடு போர் செய்து கொண்டு விளங்கப்பெற்று

எறி கடல் நடுவுள் — அலையெறிகின்ற கடலினிடையே

நஞ்சு வினை — விஷத்தொழிலையும்

கவர் தலை — கப்புவிட்டுக் கிளர்கின்ற (பல) தலைகளையு முடைய

அரவு — திருவனந்தாழ்வானாகிற

இன் அமளி ஏறி — போக்யமான சயனத்தின்மீது ஏறி

அறிதுயில் அமர்ந்து — யோக நித்திரையில் அமர்ந்து

சிவன் அயன் இந்திரன் இவர் முதல் அனைத்தோர் தெய்வம் குழாங்கள் — சிவன் பிரமன் இந்திரன் முதலிய எல்லாத் தேவ ஸமூஹங்களும்

கை தொழ கிடந்த — ஸேவிக்கும்படியாகப் பள்ளிகொண் டிருக்கிற,

தாமரை உந்தி தனி பெரு நாயக — தாமரைப்பூவைத் திருநாபியிலே உடைய அத்விதீய ஸர்வேச்வரனே!

மூ உலகு அளந்த — மூன்று லோகங்களையும் அளந்த

சே அடியோய் — அழகிய திருவடிகளை யுடையவனே! (வாழ்ந்திடுக!)

—* * *— [செக்கர்மாமுகில்.] ஆழ்வார், கீழ்ப்பிரபந்தமாகிய திருவிருத்தத்தின் முதற்பாட்டில் "அழுக்குடம்பும்" என்று தம்முடைய சரீரத்தின் தண்மையைப்பேசினார்; இந்த முதற்பாட்டில் எம்பெருமானுடைய திருமேனியின் வைலக்ஷண்யத்தை யீடுபட்டுப் பேசுகிறார். அப்ராக்ருதமாய் ஒப்புயர்வற்றதான பகவத் திவ்ய மங்கள விக்ரஹத்திற்கு ப்ராக்ருத வஸ்துக்களிலே ஒன்றை உபமானமாக எடுத்துக்கூறுவதானது * "ஒட்டுரைத் திவ்வுலகுன்னைப் புகழ்வெல்லாம் பெரும்பாலும், பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ" என்றபடி அவத்யமேயாயினும், ஓர் உபமானத்தையிட்டே அநுபவித்துத்தீரவேண்டியிருப்பதாலும், வேதாந்தங்களிலும் அப்படியே உபமானங்களையிட்டே நிரூபித்திருப்பதாலும் இவ்வாழ்வார்தாமும் இங்கு ஓர் உபமானத்தை யிட்டுப்பேசி அநுபவிக்கிறார்.

'ப்ரஸித்தோபமை' என்றும் 'அபூதோபமை' என்றும் உவமை இரண்டு வகைப்படும்; முகம் சந்திரனைப் போன்றது, திருவடி தாமரையைப் போன்றது, என்றிங்ஙனே பேசுதல் ப்ரஸித்தோபமையாம்; இனி அபூதோபமையாவது—தமிழில் இல்பொருளுவமை எனப்படும். ப்ரஸித்தமல்லாத ஒரு விஷயத்தைக் கவிகள் தம் புத்திசமத்காரத்தாலே ஏற்படுத்திக்கொண்டு அதனை த்ருஷ்டாந்தமாக்கிக் கூறுதல் அபூதோபமையாம். இப்படிப்பட்ட அபூதோபமையைக் கூறுவதன் கருத்து—உபமேயப் பொருளானது ஒப்பற்றது என்பதைத் தெரிவிப்பதேயாம்.

இப்பாசுரத்தில் அபூதோபமை வருணிக்கப்படுகிறது. எம்பெருமான் திருவரையில் திருப்பீதாம்பரம் சாத்திக்கொண்டும் திருமுடியில் திருவபிஷேகமணிந்துகொண்டும், இப்படியே மற்றும் பலபல திருவாபரணங்களைப் பூண்டுகொண்டும், செந்தாமரை போன்ற திருவாயும் திருக்கண்களும் விளங்கவும், ச்யாமமான திருமேனிநிறமானது மற்ற சோபைகளெல்லாவற்றையுங்காட்டில் விசேஷித்து விளங்கவும் கடலினிடையே திருவனந்தாழ்வானெனும் திருவணையின்மீதேறித் திருக்கண்வளர்ந்தருளுகிறபடிக்கு த்ருஷ்டாந்தமாக வருணிக்கப் பொருத்தமான ப்ரஸித்தோபமை ஒன்றில்லாமையால் அபூதோபமை அருளிச்செய்கிறார். மரகதப்பச்சைமய

* திருவாய்மொழி 3—1—2.

மான ஒரு மலையானது செந்நிறமான மேகத்தைப் பீதகவாடையாக உடுத்துக்கொண்டும், கிரீடத்தின் ஸ்தானத்திலே ஸூர்யனை அணிந்துகொண்டும், கண்டிகையின் ஸ்தானத்திலே சந்திரனை அணிந்துகொண்டும், முத்துஸரம் முதலான மற்றும் பல திருவாபரணங்களின் ஸ்தானத்திலே நக்ஷத்ரங்களைப் புனைந்துகொண்டும் திருஅதரம் திருக்கண்களின் ஸ்தானத்திலே பவழமயமான பிரதேசங்களையுடைத்தாகியும் ஒரு கடலிலே பள்ளிகொண்டிருந்தால் எப்படியிருக்குமோ அப்படியிராநின்றது தேவரீர் திருக்கோலமுந் தாமுமாகத் திருப்பள்ளி கொண்டருளுகின்றமை-என்கிறாராயிற்று.

செக்கர் என்று சிவப்பு நிறத்துக்கும் செவ்வானத்துக்கும் பெயர்; இங்கே, சிவந்தமேகமென்றும், செவ்வானத்தில் தோன்றிய மேகமென்றும் பொருள்கொள்ளலாம். மேகங்கள் மலைச்சாரலிற் படியுமாதலாலும், செக்கர்மாமுகில் படிந்திருந்தால் பீதகவாடையுடுத்தாற்போலிருக்குமாதலாலும் "செக்கர்மா முகிலுடுத்து" எனப்பட்டது. எம்பெருமான் உபமேயம்; மலை உபமானம்; பீதாம்பரம் உபமேயம், செக்கர்மாமுகில் உபமானம்.

* "கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீண்முடியன்" என்று திருவபிஷேகத்திற்கு ஸூர்யனை ஒப்புச்சொல்லுவதுண்டாதலால் "மிக்கசெஞ்சுடர்ப் பரிதிசூடி" எனப்பட்டது. எம்பெருமானுடைய கிரீடத்திற்கு ஸாதாரண ஸூர்யன் உபமானமாகப் போராமையால் மிக்க செஞ்சுடர் என விசேஷிக்கப்பட்டது. பரிதி என்கிற வடசொல் ஸாக்ஷாத்தாக ஸூர்யனைச் சொல்லாதாகிலும் தமிழில் இலக்கணையால் ஸூர்யனுக்குப் பேராயிருக்கும். இங்கு உபமானமாகிய மலை ஸூர்யமண்டலம்வரை ஓங்கியிருப்பதாகக் கொண்டால் ஸூர்யன் கிரீடத்தின் ஸ்தானத்திலே ஆவன்.

மார்பில் அணிந்துகொள்ளும் ஆபரணங்களில் 'சந்த்ரஹாரம்' என்பது ஒன்று; அது சந்திரன் வடிவமாக அமைக்கப்படுமாதலால் அப்பெயர்கொண்டதாகிறது. சந்திரனுக்கு மலையினோடு ஸம்பந்தம் கீழ்ச்சொன்னபடியிலேயாம்: ஸூர்ய சந்த்ர மண்டலம் வரையில் ஓங்கின மலை என்று கொள்க. மதி—சந்திரன்; அம்—சாரியை.

---

* பெரியாழ்வார் திருமொழி 4—1—1.

பலசுடர் என்றது ஆகாசத்திலுள்ள மற்றும் பல நக்ஷத்ராதி தேஜஸ் ஸமூஹங்களைச் சொன்னபடி. திருவாபரணங்களில் நக்ஷத்ர ஹாரமென்பதுமொன்று. புனைந்த என்று பாடமானபோது பெய ரெச்சமாகி மரதகக்குன்றத்திற்கு விசேஷணமாகக்கடவது.

பவளச்செவ்வாய்—'ப்ரவாளம்' என்ற வடசொல் பவளமெனத் திரியும். வாய் என்று இடங்களைச் சொன்னபடி. மலையிற் பல இடங்களில் பவளமுண்டாதலால் பவளங்களாற் சிவந்த இடங்கள் * "கைவண்ணந்தாமரை வாய்கமலம் போலும் கண்ணிணையு மரவிந்தம் அடியுமஃதே" என்றும் † "பவளவாய் கமலச்செங்கண்" என்றும் சொல்லப்படுகிற திவ்ய அவயவங்களுக்கு உபமான மாகக் கூறப்பட்டன.

திகழ்பசுஞ்சோதி மரதகக்குன்றம்—பசுமை நீலம் கருமை என்ற நிறங்களை அபேதமாகக் கூறுவது கவிமரபாதலால் எம்பெருமானுடைய காளமேகத்திருவுருவத்திற்கு மரதகக்குன்றத்தை [—பச்சைமாமலையை] உவமை கூறினார். ஸாதாரண மலையானது எம்பெருமானுடைய தூளக்கலாகாநிலைக்கும் வளர்த்திக்கும் ஒப்பாகுமேயன்றி, காணப்புக்கவர்களின் கண்ணையும் நெஞ்சையும் குளிர்வித்து அவர்களுடைய ஸம்ஸாரதாபங்களை யெல்லாம் போக்குந்தன்மையும் எப்போதும் தியானஞ்செய்வதற்கு உரியதாயிருத்தலும் பெருங்கருணைக்கு இருப்பிடமாயிருத்தலும் முதலிய குணவிசேஷங்களில் ஒப்பாகமாட்டாமையால், திகழ் பசுஞ்சோதி மரதகம் என்று குன்றம் விசேஷிக்கப்பட்டது. ஆக இப்படிப்பட்டதொரு குன்றம் உலகில் எங்குமில்லை; இருந்தாலும் அது கடலோன்கைமிசைக் கண்வளர்வது அஸம்பாவிதம்; ஆக இத்தனையும் ஸம்பாவிதமாகில் எம்பெருமான்படிக்குப் போலி சொல்லலாமாய்த்து.

சேக்கர்மா என்று தொடங்கி, கண்வளர்வதுபோல் என்னுமளவும் உபமானத்தை சிக்ஷித்து முடித்து, இனி பீதகவாடை என்று தொடங்கி உபமேயமான எம்பெருமானுடைய அநுபவத்தில் இழிகிறார். செக்கர்மாமுகிலுக்கு உபமேயம் பீதகவாடை;

* திருநெடுந்தாண்டகம்-21.

† திருமாலை—2.

மிக்க செஞ்சுடர்ப் பரிதிக்கு உபமேயம் முடி (அந்தாவது-கிரீடம்); அஞ்சுடர் மதிக்கும் பலசுடர்கட்கும் உபமேயம் பூண்முதலா மேதகு பல்கலன். பூண் என்பது ஆபரணஸாமாந்யத்துக்குப் பேராயினும் இங்கே சந்த்ர ஹாரமென்கிற ஆபரண விசேஷத்தைக் குறிக்குமென்க. மேதகு—மேவத்தகு என்றபடியாய், (திருமேனிக்குப்) பொருந்தத்தக்கின என்றதாம். மெய்தகு என்றும் பாடமுண்டாம்; மெய்—திருமேனி. கலன்—ஆபரணம். மீதிட்டுப் பச்சைமேனி மிகப்பகைப்ப—எம்பெருமானுடைய திருமேனியில் பீதகவாடையின் சோதி ஒரு நிறமாகவும், திருவபிஷேகத்தின் சோதி மற்றொரு நிறமாகவும், திவ்ய பூஷணங்களின் சோதி வேறொரு நிறமாகவும் திருவாய் திருக்கண் முதலிய அவயவங்களின் சோதி மற்றுமோர் நிறமாகவும் இப்படி பலவகை நிறச்சோதிகள் இருந்தாலும் திருமேனியின் நிறமாகிய * பாசியின் பசும்புறம் போன்ற திருநிறமே மற்ற எல்லாச் சோபைகளோடும் போரிட்டு வெற்றிபெற்று விளங்குகின்றதாம். மேனி என்று உடலுக்கும் நிறத்துக்கும் பேர்; இங்கு நிறத்தைச் சொல்லுகிறது. பசுமை நிறமானது; (மீதிட்டு மிகப்பகைப்ப—மிகப்பகைத்து மீதிட என்று விகுதிமாற்றிக் கூட்டியுரைக்கலாம்.) என்னுடைய சோபையின் முன்னே உங்களுடைய சோபை எப்படி விளங்கலாம் என்று போராடித் தானே மேற்பட்டதாயிற்றும். மீதிடுதல் — வெற்றி பெறுதல் என்னலாம். ஆக இவ்வளவும் எம்பெருமானுடைய திவ்ய சோபைகளை வருணித்தாராயிற்று. இனி, பள்ளிகொள்ளுமழகைப் பேசுகிறார்.

க்ஷீரஸாகரமத்தியில் திருவனந்தாழ்வான்மேல் துயில்கொண்டருளி, சிவன் பிரமன் இந்திரன் முதலான தேவர்களால் தொழப்படுமவனே! தாமரைபூத்த திருநாபியையுடைய ஸர்வேச்வரனே! பண்டொருகால் மாவலிபக்கல் நீரேற்று மூவுலகுமளந்தவனே! ஜய விஜயீபவ—என்றாராயிற்று.

திருமேனியழகிலும் துயில்கொண்ட அழகிலும் இவ்வாழ்வார் நெஞ்சைப் பறிகொடுத்தாராகையாலே ஒரு வினைமுற்றோடே பாசுரத்தை முடிக்கமாட்டாமல் "மூவுலகளந்த சேவடியோயே!" என்று கண்ணுஞ் சுழலேயிட்டுக் கிடக்கிறார்.

நஞ்சு + வினை—நச்சுவினை; சத்துருக்கள்மேல் விஷத்தை உமிழும் தொழிலையுடையனிறே திருவனந்தாழ்வான். கவர்தலை—

கப்புவிட்டுக் கிளர்கின்ற தலைகளையுடைய என்று சப்தார்த்தம்; பலபல தலைகளையுடைய என்பது தாத்பரியம். அமளி—படுக்கை. அறிதுயில்—யோகநித்திரை. சேவடியோய்-சேவடியோன் என்பதன் விளி. .... (க)

உலகுபடைத் துண்டவெந்தை * அறைகழல்
சுடர்ப்பூந் தாமரை சூடுதற்கு - * அவாவா
ருயிருருகியுக்க * நேரியகாத
லன்பிலின்பீன் தேறல் * அமுத
வெள்ளத்தானும் சிறப்பு விட்டு - * ஒருபொருட்
கசைவோரசைக * திருவோடு மருவிய
இயற்கை * மாயாப் பெருவிறலுலகம்
மூன்றினொடு நல்வீடு பெறினும் *
கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே ? (உ)

உலகு	உலகங்களை
படைத்து	ஸ்ருஷ்டித்து
உண்ட	(பிரளய காலத்தில்) விழுங்கிய
எந்தை	ஸர்வேச்வரனுடைய
அறை கழல் சுடர் பூ தாமரை	ஆபரணவொலி பொருந்திய திருவடிகளாகிற அழகிய தாமரை மலர்களை
சூடுதற்கு	சிரோபூஷணமாக அணிவதற்கு
அவாவு	ஆசைப்படுகின்ற
ஆர் உயிர்	அருமையான ஆத்மாவானது
உருகி உக்க	நைந்து சிதிலமாக,
நேரிய	(அந்தத்யானத்தால்) ஸம்பவித்த
காதல்	பக்தியாகிய
அன்பில்	ஆசைப் பெருக்கத்தில் உற்பவித்து
இன்பு ஈன்	இன்பத்தைக் கொடுக்கிற

தேறல்	தேன்போலிருக்கிற (அல்லது, தேனாகிய)
அமுதம் வெள்ளத்தான் ஆம் சிறப்பு விட்டு	அமிருத ப்ரவாஹத்தில் மூழ்கி யிருக்கையாகிற பெருமையை விட்டிட்டு
ஒரு பொருட்கு	க்ஷுத்ரமான வொரு பலனுக்காக
அசைவோர்	அலைகின்றவர்கள்
அசைக	அப்படியே அலையட்டும்; (அவர்களைப் பற்றி நமக்கென்ன கவலை ?)
திருவொடு மருவிய இயற்கை	செல்வத்தோடு எப்போதும் சேர்ந்திருக்கையாகிற நித்திய ஐச்வரிய நிலைமையென்ன,

மாயா பெரு விறல்	அழியாத பெருமிடுக்கென்ன	பெறினும்	பெறுவதா யிருந்தாலும்
உலகம் மூன்றினொடு	மூவுலகுக்கும் நாயகனாயிருக்கை யென்ன	தெள்ளியோர்	விவேகிகளுடைய
நல் வீடு	உத்தமமான மோக்ஷ பதவி யென்ன (ஆகிய இவற்றை)	குறிப்பு	அந்தரங்கமானது
		கொள்வது எண்ணுமோ	பெற்றுக்கொள்ள நினைக்குமோ ?

* * *—[உலகுபடைத்து.] கீழ்ப்பாட்டில் எம்பெருமானுடைய விலக்ஷணமான திருமேனியழகை அநுஸந்தித்த ஆழ்வார், இப்படி பரமவிலக்ஷணனான எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளைச் சென்னியிற் சூடவேணும் சூடவேணும் என்று ஆவல்கொண்டிருப்பதேயன்றோ புருஷார்த்தம்; இவ்வுலகிலுள்ள பாவிகள் இதனை யறியாதே 'பிள்ளைவேணும் குட்டிவேணும் சேலை வேணும் செல்வம்வேணும்' என்று க்ஷுத்ர பலன்களை யெல்லாம் விரும்பி இவை கொடுப்பாராரென்று கண்டவிடமெங்கும் அலைந்து திரிகிறார்களே ! அந்தோ ! இஃது என்ன கொடுமை ! என்று முதலிலே திருவுள்ளம் நொந்து, அப்படிப்பட்ட க்ஷுத்ரர்களைப் பற்றி நாம் என் கவலைப்படவேணும் ? அவர்கள் இஷ்டப்படி அலைந்துழலட்டும் ; * உண்டியே உடையே உகந்தோடுமிம்மண்டலத்தாரைப்பற்றி நாம் சிந்திக்கவே வேண்டா ; பகவத்பக்தி தலையெடுத்த மஹான்களும் இப்பூமியின்கண் இருக்கிறார்களன்றோ ; அவர்களுடைய அத்யவஸாயத்தைக் கண்டு நாம் உகப்போம் ; என்று பரமபக்தர்களுடைய அந்தரங்க வுறுதியைப் பேசி மகிழ்கிறார் இப்பாட்டில்.

திருச்சந்த விருத்தத்தில்—"கேடில் சீர் வரத்தனாய்க் கெடும் வரத்தயனரன், நாடினோடு நாட்ட மாயிரத்தனாடு நண்ணினும், வீடதான போகமெய்தி வீற்றிருந்தபோதிலும், கூடுமாசையல்ல தொன்று கொள்வனோ குறிப்பிலே" என்று திருமழிசைப்பிரான் அருளிச்செய்த பாசுரத்தைப் பெரும்பாலுந் திருவுள்ளத்திற் கொண்டு இப்பாசுரமருளிச்செய்கிறாரென்பது உய்த்துணரத்தக்கது. எம்பெருமானைக்கிட்டி அநுபவிப்பதிலுங்காட்டில் அவ்வநுபவத்தைப்பற்றின மனோரதமே நித்யமாய்ச் செல்லுமாகில் அதுவே சிறக்குமென்பது ஆழ்ந்த பக்தியுடையவர்களுடைய ஸித்தாந்தம்;

அதைத்தானருளிச்செய்தார் திருமழிசைப்பிரான். ப்ரஹ்மலோக ஸாம்ராஜ்யம் கிடைத்தாலும், ருத்ரலோக ஆதிபத்யம் கிடைத்தாலும் இந்திரலோகமாளும் பாக்கியம் வாய்த்தாலும், பரம புருஷார்த்தமாகிய ஒன்றான பரமபதாநுபவமே கிடைப்பதானாலும் இவற்றையெல்லாம் ஒரு புருஷார்த்தமாகவே மதிக்கமாட்டேன்; பின்னை எனக்கு எதிலே ஊற்றமென்றால் 'எம்பெருமானோடே கூடவேணும், எம்பெருமானோடு கூடவேணும்' என்று மனோரதங்கொண்டிருப்பதுண்டே, அதுதான் எனக்குப் பரமபோக்யம் என்றார்.

இஷ்டமான விஷயத்தை அநுபவிப்பதிற்காட்டிலும் அநுபவிப்போமென்னும் மனோரதமே சிறந்ததாமென்பதை அனுபவ ரஸிகர்கள் எளிதில் உணர்வர். தேனூறி எப்பொழுதுந் தித்திக்கும்படியானது மனோரதமேயாம். திருவரங்கஞ்சென்று நம் பெருமாளை ஸேவிக்கவேணுமென்று ஒருவனுக்கு ஆவல் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள்; ஒருநாள் போய் ஸேவித்து வந்துவிட்டால் அவ்வளவிலே ஆசை தீர்ந்துவிட்டதாகும்; அங்ஙனல்லாமல் மனோரதமேயாய்ச் செல்லுமாகில் அது நெடுநாளைக்கு ரஸவத்தரமாயிருக்கும். சந்தனம் பூசிக்கொள்ளுதல், புஷ்பஞ்சூட்டிக்கொள்ளுதல், பஞ்சகச்சவேஷ்டி உடுத்துக்கொள்ளுதல் முதலிய அலங்காரகாரியங்களில் பிரமசாரிகளுக்கு உள்ள ஆவல் க்ருஹஸ்தர்களுக்கு இல்லாமையும் இங்கு ஒரு உதாஹரணமாகக் காட்டத்தகும். ஆகவே, அனுபவ நிலைமையிற் காட்டிலும் அநுபவப் பாரிப்பு நிலைமையே சிறந்ததென்பது விளங்கும்.

ஆதியில் உலகங்களைப் படைத்தும் பிரளயம் வந்தவாறே அவற்றைத் திருவயிற்றிலே வைத்தருளி ரக்ஷித்தும் வருகிற எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளை நாம் சிரமேல் அணிந்து கொள்ளவேணுமென்று ஆவல்கொண்டு, அந்த ஆவலினால் நெஞ்சு நீர்ப்பண்டமாக உருகி, மேன்மேலும் பரபக்தி பரமபக்திகள் தலையெடுத்து, அப்படிப்பட்ட பரமபக்தி நிலைமையிலே அமர்ந்திருக்கை தானே பரமபோக்யமானது; எம்பெருமானது திருவடிகள் தலைமேல் வந்து சேரவேண்டா; திருநாடும் எய்தவேண்டா; வழுவிலா வடிமைசெய்யப் பெறவேண்டா; "இவை நமக்கு வாய்க்கவேணும்" என்கிற ஆவல் ஒன்றுமாத்திரம் அநவரதம் நெஞ்சில் நடையாடுமேல்

போதுமான்று ; இந்த ஆவல்தான் அமுதவெள்ளம். இப்படிப் பட்ட ஆவல் பூண்டு " என் கண்ணிணைக ளென்றுகொலோ களிக்கும் நாளே " " மாயோனை மணத்தூணை பற்றிநின்று என் வாயார என்று கொலோ வாழ்த்துநாளே " " அங்கடியவரோடு என்று கொலோ அணுகுநாளே " " கொய்மலர்தூய் என்று கொலோ கூப்புநாளே " " என்மலர்ச்சென்னி என்று கொலோ வணங்கு நாளே" " அணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள் இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானுமிசைந்துடனே என்று கொலோ இருக்குநாளே " என்றிவைபோல்வன பல பாசுரங்களை வாய்வெருவிக்கொண்டு இதுவே ஒரு ஆநந்தமாகப் போதுபோக்க ப்ராப்தமாயிருக்க, இந்தப் போதுபோக்கை விட்டிட்டுக் கூறை சோறு முதலிய அற்பபலன்களை அபேக்ஷித்து அங்குமிங்கும் அலைந்துழல்கின்ற பாமரர்கள் அப்படியே அலையட்டும் ; அவர்கள் எக்கேடு கெட்டால் நமக்கென்ன ? என்கிறார் ஒருபொருட்கசை வோர் அசைக என்னுமளவால்.

தெளிந்த ஞானமுடைய மஹான்கள் இப்படிப்பட்ட க்ஷுத்ர பலன்கள் கையிலே ஸித்தமாகவந்து சேர்ந்தாலும் உதறித்தள்ளி விடுவர்கள் ; கீழ்ச்சொன்ன அமுதவெள்ளத்திலேயே அவர்கள் ஊன்றி யிருப்பர்கள் என்கிறார் மேல்.

திருவெர்டுமருவிய இயற்கை பெறினும், மாயாப் பெருவிறல் பெறினும், உலகம் மூன்று பெறினும், நல்வீடு பெறினும் தெள்ளியோர் குறிப்பு (இவற்றைக்) கொள்வதெண்ணாது. " கூடுமாசை யல்ல தொன்று கொள்வனோ குறிப்பிலே " என்றபடி எம்பெருமானோடு கூடவேணுமென்கிற ஆசையொன்றையே தெள்ளியோர் குறிக்கொண்டிருப்பர் என்றவாறு. இங்குத் தெள்ளியோர் என்றது திருமழிசைப்பிரானையும் அவர்போல்வாரையுமென்க.

" அவாவாருயிருருகியுக்க " என்று தொடங்கிச் " சிறப்பு விட்டு " என்றவரையில் அவா காதல் அன்பு இன்பு தேறல் அமுதம் என்று ஒருபொருட் பன்மொழிகளை இணைத்துத் தொடுத்திருப் பதனால் பகவானுடைய திருவடிகளை முடிமேலணிந்து கொள்வதை ஆசைப்படும் விஷயத்தில் ஆழ்வார்க்குண்டான ஆதரம் அளவற்ற தென்பது நன்கு வெளிப்படும். அவாவாருயிர் என்றவிடத்து

அவா ஆர்' என்றும் பிரிக்கலாம்; ஆசை நிரம்பிய என்று பொருளாம்.

ஒருபொருட்கு அசைவோர் அசைக—ஸம்ஸாரிகள் விரும்பும் பொருள்களை ஆழ்வார் தமது திருவாக்காலே சொல்லவும்கூசி ஒருபொருட்கு என்கிறார். திருவோடுமருவிய இயற்கை—நாலு நாளில் அழிந்துபோகக்கூடிய ஐச்வரியமல்லாமல் எப்போதும் ஸ்திரமாயிருக்கக்கூடிய ஐச்வரியத்தைப் பெற்றாலும் என்றபடி. மருவுதல்—எப்போதும் கூடியிருத்தல். இயற்கை—தன்மை; ஐச்வரியத்தோடு எப்போதுங் கூடியிருக்குந் தன்மையாவது நித்ய ஸ்ரீமானாக இருக்கை. அப்படிப்பட்ட நிலைமையையும் தெள்ளியோர் குறிப்பு வேண்டமாட்டாதாம்.

மாயாப்பெருவிறல்—ஐச்வரியம் அளவற்றிருந்தாலும் அவற்றை அநுபவிப்பதற்கு உறுப்பான சக்தி பூர்ணமாக இல்லாவிடில் பயனில்லையே; அந்த சக்தியும் கூடவே கிடைக்கப் பெற்றாலும் அப்போதும் வேண்டார்கள் என்றபடி. மாயா—மாய்தலாவது அழிதல்; அழியாத என்கை. உலகம்மூன்றிேைடு—கீழே சொன்ன நித்யமான ஐச்வரியம் என்றமாத்திரமேயல்ல; மூவுலகத்தையும் ஆளும்படியான பெருஞ்செல்வம் கைபுகுந்தாலும் வேண்டார்களென்கை. பலசொல்வி என்? ஸகல ஐச்வரியங்களுக்கும் மேற்பட்டதான மோக்ஷ ஸாம்ராஜ்யந்தானும் பெறுவதாயிருந்தாலும் * "எம்மாவீட்டுத் திறமும் செப்பம்" என்றும், † "இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றும் ‡ "஭ாவோ நாந்யத்ர க³ச்ச²தி" [பாவோ நாந்யத்ர கச்சதி] $ "வைகுண்டவாஸேऽபி ந மேऽபிலாஷ:" [வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ:] என்றும் சொல்லுகிறபடியே அந்த மோக்ஷந்தன்னையும் ஒரு பொருளாக மதியார்களென்கை.

ஆக இப்பாட்டால்—ஸம்ஸாரிகளைப்போலே க்ஷுத்ரபலன்களை விரும்பி அலையாமல் விவேகிகளைப்போலே பகவத்விஷயத்தில் அநுராகம் மிக்கிருப்பதே நமக்கு ப்ராப்தம் என்றாராயிற்று. (உ)

---

* திருவாய்மொழி 2-9-1.

† திருமாலை. 2.

‡ சிறியதிருவடியின் வார்த்தை.

$ வேதாந்ததேசிகன் ஸூக்தி.

குறிப்பில்கோண்டு நெறிப்பட * உலகம்
மூன்றுடன் வணங்குதோன்று புகழ், ஆணை *
மெய்பெற நடாய தெய்வம் மூவரில்
முதல்வனாகி * சுடர்விளங்ககலத்து *
வரைபுரை திரைபொரு பெருவரை வெருவர *
உருமுரலொலி மலி நளிர்கடற்படவர
வரசு -உடல்தடவரை சுழற்றிய * தனிமாத்
தெய்வத்தடியவர்க்கினி நாமாளாகவே
யிசையுங்கொல் ?* ஊழிதோறூழியோவாதே. (௫)

மூன்று உலகம்	மூவுலகங்களும்
நெறி பட	நல்வழி படிந்து உஜ்ஜீவிக்கும் படியாக
குறிப்பில் கொண்டு	திருவுள்ளம்பற்றி,
உடன் வணங்கு தோன்று புகழ்	அவ்வுலகங்களெல்லாம் ஒன்று சேர்ந்து வணங்கப் பெற்றமையால் ப்ரஸித்தமான கீர்த்தியையுடையனாய்
ஆணை மெய் பெற நடாய	தனது ஆஜ்ஞையைத் தடையின்றிச் செலுத்துமவனாய்
தெய்வம் மூவரில் முதல்வன் ஆகி	மூன்று மூர்த்திகளுக்குள்ளே ப்ரதானனாய்
சுடர் விளங்கு அகலத்து	திருவாபரணச் சோதி விளங்குகின்ற திருமார்பையுடையனாய்,
வரை புரை	மலைபோன்ற
திரை	அலைகள்
பொரு	எறியப்பெற்றதும்,
பெரு வரை வெருவர	குலபர்வதங்களும் அஞ்சும்படியாக
உரும் முரல் ஒலி மலி	இடிபோல் ஒலிக்கின்ற கோஷம் நிறைந்ததும்,
நளிர்	குளிர்ச்சியையுடையதுமான
கடல்	கடலில்,
படம் அரவு அரசு உடல்	படங்களையுடைய ஸர்ப்பராஜனாகிய வாஸுகியின் உடலை
தட வரை	(மந்தரமென்கிற) பெரிய மலையிலே
சுழற்றிய	கட்டிச் சுழற்றினவனாய்,
தனி	அத்விதீயனான
மா தெய்வம்	தேவாதி தேவனுடைய
அடியவர்க்கு	பக்தர்களுக்கு
நாம் இனி ஊழி தோறு ஊழி ஓவாது ஆள் ஆக இசையும் கொல்	நாம் இனி ஸர்வ காலமும் இடையறாது ஆட்பட்டிருக்கப் பொருந்துமா.

* * *—[குறிப்பில்கோண்டு.] பகவத்பக்தியைப் பற்றிப் பேசினார் கீழ்ப்பாட்டில்; பகவானோடு நின்றுவிடாமல் பாகவதராளவுஞ் சென்று பக்திபண்ணுகை ஸ்வரூபமாதலால் அப்படிப்பட்ட பாகவதபக்தி நமக்கு இனி ஒருநாளும் வழுவாமல் சாச்வதமாக உண்டாகக் கூடுமோவென்று அந்த நிஷ்டையில் தமக்குண்டான அவாவை வெளியிடுகிறார் இதில்.

குறிப்பில்கோண்டு என்றுதொடங்கித் தனிமாத் தெய்வம் என்னுமளவும் எம்பெருமானுடைய ஸ்வரூபஸ்வபாவங்களைச் சொல்லுகிறார். உலகம் மூன்று நெறிப்படக் குறிப்பில்கோண்டு உடன்வணங்கு தோன்றுபுகழ்—தன்னாலே படைக்கப்பட்ட மூவுலகங்களும் தீவழியில் செல்லாமல் நல்வழியில் படிந்து உஜ்ஜீவிக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றி அப்படியே அவை நல்வழி படிந்து தன்னை வணங்க அதனால் எங்கும் பரந்த புகழையுடையவன் என்கிறது.

ஆணை மெய்பெற நடாய—ஆணையாவது ஆஜ்ஞை; எம்பெருமானுடைய ஆஜ்ஞையாவது—சாஸ்த்ரம்; "శ్రుతిః స్మృతిర్మమైవాజ్ఞా యస్తాముల్లంఘ్య వర్తతే। ఆజ్ఞాచ్ఛేదీ మమద్రోహీ మద్భక్తోపి నవైష్ణవః" [ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே— ஆஜ்ஞாச்சேதீ மமத்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ:] என்று எம்பெருமான்தானே அருளிச்செய்திருக்கிறபடி ச்ருதிஸ்ம்ருதிகள் முதலிய சாஸ்த்ரங்களாகிற திவ்யாஜ்ஞையைத் தடையின்றி எங்கும் நடத்துபவன் என்கை. * "கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள்தானும், மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினால் அருள்செய்தான்" என்றபடி தன்னாலே அளிக்கப்பட்ட சாஸ்த்ரங்கள் பழுதுபடாதபடி அவற்றை உலகில் நன்கு பிரசாரம் செய்விப்பவன் என்றவாறு.

தெய்வம்மூவரில்முதல்வனாகி—அரி அயன் அரன் என்று சொல்லப்படுகிற மூன்று தெய்வங்களுள் முதல் தெய்வம் தானாயிருக்கை. "ஆணை மெய்பெற நடாய தெய்வம் மூவரில்" என்று சேர்த்து நடாய என்பதை தெய்வம் மூவர்க்கு விசேஷணமாக அந்வயிப்பதும் பொருந்தும். அப்போது, எம்பெருமானாகிய தன்னுடைய ஆஜ்ஞையை உள்ளபடி பரிபாலிக்கின்ற பிரமன் சிவன்

* [பெரிய திருமொழி 2-8-5.]

இந்திரன் என்னும் மூவர்க்கும் நியாமகன் என்று பொருளாம். இப்போது, மூவரில் என்றது மூவர்க்கும் என்றபடி.

சுடர்விளங்கு அகலத்து—சுடராவது தேஜஸ்ஸு; திருவாபரணங்களாலுண்டாகும் தேஜஸ்ஸைச் சொல்லுகிறது. திருவாபரணச் சோதியாலே பளபளவென்று விளங்குகின்ற திருமார்பையுடையனாய் என்றபடி.

வரைபுரைதிரைபொரு என்று தொடங்கித் தடவரைசுழற்றிய என்னுமளவும் ஒரு வாக்கியம். துர்வாஸமாமுனியின் சாபத்தால் தேவர்களின் செல்வம்யாவும் கடலில் ஒளிந்து ஒழிந்துவிடவே அசுரர் வந்து பொருது அமரரை வென்றனர்; பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து அப்பிரான் அபயமளித்துக் கட்டளையிட்டபடி அசுரர்களையும் துணைக்கொண்டு மந்தரமலையை மத்தாக நாட்டி வாஸுகியென்னும் மஹாநாகத்தைக் கடைகயிறாகப்பூட்டிப் பாற்கடலைக் கடையலாயினர். அப்போது மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்கள் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமைவடிவமெடுத்து அம்மலையின் கீழ்ச்சென்று அதனைத் தனது முதுகின்மீது கொண்டுதாங்கி அம்மலை கடலில் அழுந்திவிடாமற் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தனன். அப்போது, வாஸுகி நாகத்தின் வாலைப்பிடித்துக்கொண்ட தேவர்களும் தலையைப்பிடித்துக் கொண்ட அசுரர்களும் ஆகிய இருதிறத்தாரும் அதனை வலியப் பிடித்து இழுத்துக் கடையவல்ல வலிமையில்லாதவராய் நிற்க அது நோக்கி அத்திருமால் தான் ஒரு திருமேனியைத் தரித்துத் தேவர்கள் பக்கத்திலேயும், வேறொரு திருமேனியைத் தரித்து அசுரர்கள் பக்கத்திலேயும் நின்று வாஸுகியின் வாலையும் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தனன் என்ற வரலாறு அறியத்தக்கது.

கடைகிற அக்காலத்தில் கடலானது மிகவும் பயங்கரமாக இருந்ததென்பதைக் கூறுகின்றார் வரைபுரை திரைபொருஎன்று தொடங்கி. அப்போது கடலில் ஸாதாரணமான அலைகள் கிளம்பவில்லை; ஒவ்வொரு அலையும் ஒவ்வொரு மலை பெயர்ந்தாற்போலே பெயர்ந்து எறிந்ததாம். புரை—உவமவுருபு; மலைபோன்ற [பெருப்பெருத்த] அலைகள், பொரு—போதப்பெற்ற; இது கடலுக்கு விசேஷணம்.

உருமுரலொலிமலி என்பதும் கடலுக்கு விசேஷணம். கடைகிற காலத்தில் கடலில் உண்டான த்வனியானது இடியிடித்தாற்போ லிருந்ததாம். அந்த த்வனி குலபர்வதங்களையும் நடுக்கி அசைக்க வற்றாயிருந்தமை தோற்றப் பெருவரைவெருவர எனப்பட்டது. உரும் என்றும் உருமு என்றும் இடிக்குப் பெயர்; உரும் முரல் என்று பிரிக்க. இடிபோலே முரல்கின்ற [கோஷிக்கின்ற] யாதொரு ஒலியுண்டு, அது மலி—நிறைந்திருக்கிற என்றபடி. "வரைபுரை திரை பொரப் பெருவரை வெருவுற" என்ற பாடமும் ஒக்கும்.

நளிர் கடல்—குளிர்ந்தகடலிலே. கடலுக்கு இயற்கையாகவுள்ள குளிர்த்தியைச் சொல்லுகிறதன்று இங்கு; கீழ்ச் சொன்னபடி பயங் கரமாயிருக்கச் செய்தேயும் எம்பெருமானுடைய கடாக்ஷம் பட்ட மாத்திரத்தில் குளிர்ந்தபடியைச் சொல்லுகிறது. இப்படிப்பட்ட கடலிலே மத்தாக நாட்டின மந்தரமலையிலே வாஸுகி நாகத்தைக் கடைகயிறாகக் கட்டிச் சுழற்றிய யாதொரு தனிமாத் தெய்வமுண்டு-ஒப்புயர்வற்ற பரதேவதை, அதற்கு நாம் ஆளாவதிலுங்காட்டில், அதற்கு ஆட்பட்டிருக்கும் அடியவர்களுண்டே, அவர்கட்கு [ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு] இனிமேலுள்ள காலமெல்லாம் நாம் ஆட் பட்டிருக்க வாய்க்குமா? இப்படிப்பட்ட மஹாபாக்யமும் நமக்குக் கிடைக்குமோ? என்றாராயிற்று.

ஆளாகவே என்றவிடத்துள்ள ஏகாரத்தைப் பிரித்து "அடி யவர்க்கே" என்று கூட்டிக்கொள்ளலாம். பிரயோஜநாந்தர பரரான தேவதைகளுக்காகத் தன் உடம்புநோவக் கடலைக்கடைந்து அம்ருதத்தைக் கொடுத்தானென்கிற மஹோபகாரத்தில் ஈடுபட்டி ருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே ஆட்பட்டிருக்க விரும்பினாராயிற்று.

. ஊழிதோறூழி—ஊழியூழிதோறு என்கை. ஊழியாவது காலம்; ஸகலகாலமும் என்றபடி. ஓவாது என்றது - நடுவில் ஒரு க்ஷணமும் பாழாகாமல் என்றவாறு. .... (ங)

ஊழிதோறூழி யோவாது * வாழிய
வென்று யான்தொழ விசையுங்கொல்? *
யாவகை யுலகமும் யாவரு மில்லா *
மேல்வரும் பெரும்பாழ் காலத்து - * இரும்பொருட்
கெல்லா மரும்பெறல் தனிவித்து - * ஒருதா

ஞகித் தெய்வநான்முகக் கொழுமுளே
யீன்று * முக்கணீசனெடு தேவுபல நுதலி *
மூவுலகம் விளைத்த வுந்தி *
மாயக்கடவுள் மாமுதலடியே. (ச)

யாவகை உலகமும்	எவ்வகைப்பட்ட லோகங்களும்		(ஆக இவ்வகையாலே)
யாவரும்	எவ்வகைப்பட்ட பிராணிகளும்	மூ உலகம் விளைத்த உந்தி	மூன்று லோகங்களையும் உண்டாக்கின திருநாபியை யுடையனாய்
இல்லா	இல்லாமலிருந்த		
மேல் வரும் பெரு பாழ் காலத்து	கீழ்க்கழிந்த மஹா ப்ரளய காலத்தில்	மாயன்	ஆச்சர்யபூதனாய்
இரு பொருட்கு எல்லாம்	எண்ணிறந்த ஆத்ம வஸ்துக்களுக் கெல்லாம்	கடவுள்	ஸர்வோத்தமனான ஸ்ரீமந் நாராயண னுடைய
பெறல் அரு தனி ஒரு வித்து தான் ஆகி	பெறுதற்கரிய மூவகைக் காரணமும்தானே யாய்க்கொண்டு	மா முதல் அடியே	(உஜ்ஜீவனத்திற்கு) மூலகாரணமான திருவடிகளையே
		ஊழி ஊழி தோறு	ஸர்வகாலமும்
தெய்வம் நான்முகன் கொழு முளை ஈன்று	நான்முகக் கடவுளாகிற சிறந்தவொரு முளையைப் படைத்து (அவன் மூலமாக)	ஓவாது	இடைவிடாமல்
		வாழிய என்று யாம் தொழ	'வாழ்ந்திடுக' என்று நாம்சொல்லி வணங்கும் படியாக
முக்கண் ஈசனெடு பல தேவு நுதலி	முக்கண்ணனான சிவன் முதலிய பல தேவதைகளை உண்டாக்கி	இசையும் கொல்	(பாக்கியம்) வாய்க்குமோ.

* * *—[ஊழிதோறூழி.] கீழ்ப்பாட்டில் "தனிமாத் தெய்வத் தடியவர்க்கினி நாமாளாகவே இசையுங் கொல்" என்று பாகவத சேஷத்வம் நமக்குக் கிடைக்குமா? என்று மனோரதித்தார்; பாக வதர்களை அநுவர்த்தித்துப் பார்த்தார்; அவர்கள் எப்போதும் "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு....உன் சேவடி செவ்வி திருக்காப்பு" என்று எம்பெருமான் திருவடிகளுக்கு மங்களா சாஸநம் செய்வதையே தொழிலாகக் கொண்டிருந்தார்கள்; அதைப் பார்த்து 'இவர்களுடைய காலக்ஷேபமேயன்றோ நமக்கு உத்

தேச்யம்; இவர்களோ இடைவிடாது எம்பெருமான் திருவடிகளுக்கு மங்களாசாஸநமே பண்ணிக்கொண்டிராநின்றார்கள்; இது மிக அழகாயிராநின்றது; இப்படிப்பட்ட போதுபோக்கு நமக்கும் கிடைக்குமாகில் நலமாயிருக்குமே!' என்று கொண்டு, அப்படிப்பட்ட பாக்கியம் வாய்க்குமா என்கிறார் இதில்.

யாவகையுலகமும் என்று தொடங்கி மாயக்கடவுள் என்னுமளவும் எம்பெருமானுடைய பெருமையைப் பேசுகிறார். * "பன்மைப் படர் பொருளாது மில்பாழ் நெடுங்காலத்து, நன்மைப்புனல் பண்ணி நான்முகனைப்பண்ணித் தன்னுள்ளே, தொன்மைமயக்கிய தோற்றிய சூழல்கள் சிந்தித்தே" என்ற பாசுரம் இங்கு அநுஸந்திக்கத்தகும். சேதநவர்க்கங்களிலும் அசேதநவர்க்கங்களிலும் ஒன்றுமில்லாதபடி மஹாப்ரளயங் கோத்தகாலத்தில், தேவமநுஷ்யாதி ரூபத்தாலே எண்ணிறந்தவைகளாய் அசித்தோடே கலசிக்கிடப்பவைகளான ஜீவவஸ்துக்களுக்கெல்லாம் தானே காரணமாயிருப்பவன் எம்பெருமான்.

தனிவித்து ஒரு தானாகி—தான் ஒரு தனிவித்தாகி என்று அந்வயிப்பது. வித்தாகி என்னமல் ஒரு வித்தாகி என்னுமல் ஒரு தனிவித்தாகி என்றதனால் - நிமித்தகாரணம் ஸஹகாரி காரணம் உபாதாநகாரணம் என்கிற மூவகைக் காரணங்களும் எம்பெருமான் தானேயாகிறான் என்று தெரிவிக்கப்பட்டதாயிற்று. உலகில், குடம் துணி முதலிய வஸ்துக்கள் ஜனிக்கவேணுமானால் மேற்சொன்ன முக்காரணங்களும் அமையவேண்டும்; பானைக்கு மண் உபாதாநகாரணமென்றும், சக்கரம் தடி தண்ணீர் முதலியவை ஸஹகாரிகாரணமென்றும், குயவன், காலம், அத்ருஷ்டம் முதலியன நிமித்தகாரணமென்றும் சொல்லப்படும். கார்யவஸ்துக்களுக்கெல்லாம் இப்படிப்பட்ட காரணங்கள் இருந்தாகவேண்டுமானால் பிரபஞ்சமாகிற காரியத்திற்கு எது உபாதானகாரணம்? எது ஸஹகாரி காரணம்? எது நிமித்தகாரணம்? என்று கேள்வி பிறக்குமே; எம்பெருமான்றானே மூவகைக் காரணமுமாகிறானென்பது வேதாந்திகளின் கொள்கை. இஃது இங்கு விரிப்பிற் பெருகும்.

மேல்வரும் என்பதற்கு, கீழே கழிந்த என்று பொருள் கொள்ளுதல் விபரீதலக்ஷணையினாலென்க. இங்கு வியாக்யான ஸ்ரீஸூ

* திருவாய்மொழி [7-5-4.]

க்தி:—" மேலென்றது பண்டென்றபடி ; வருமென்றது போன வென்றபடி. "

அரும்பேறல் என்றது நிர்ஹேதுகத்வத்தைக் காட்டும். இப்படிப்பட்ட விலக்ஷணமானதொரு காரணவஸ்துவானது ஸம்ஸாரிகளிடத்திலுள்ள கிருபையினால் தானுகவேவந்து முகங்காட்டிக் காரியம் செய்ததென்கை. அன்றி, ஒருவருடைய முயற்சியால் பெறமுடியாதது.

அத்வாரக ஸ்ருஷ்டியென்றும் ஸத்வாரக ஸ்ருஷ்டியென்றும் ஸ்ருஷ்டி இருவகைப்படும். எம்பெருமான் தானே நேராக ஸ்ருஷ்டிப்பது அத்வாரகஸ்ருஷ்டியாம்; ஒருவன் மூலமாக ஸ்ருஷ்டிப்பது ஸத்வாரக ஸ்ருஷ்டியாம். அண்டஸ்ருஷ்டி வரையில் தானே ஸ்ருஷ்டிப்பதாதலால் அது அத்வாரகஸ்ருஷ்டி. இவ்வருகுள்ளவற்றை நான்முகன் மூலமாக ஸ்ருஷ்டிக்கிறுகையாலே இவற்றின் ஸ்ருஷ்டி ஸத்வாரகஸ்ருஷ்டி. இதைச் சொல்லுகிறார் மேல் தெய்வநான்முகக்கொழுமுளையீன்று என்று. கப்பும் கிளையும் காயும் கனியும் முளையினின்று உண்டாகிறபடியால் நான்முகன் இங்கு ஒரு முளையாகக் கூறப்பட்டான். கொழுமுளை என்றது சிறந்த அங்குரம் என்றபடி. இப்பாலுள்ள கார்யவர்க்கங்களையெல்லாம் உண்டாக்குகைக்குப் பாங்கான யோக்யதையை யுடையவன் பிரமன் என்றவாறு.

"நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனுந் தான் முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்" என்றபடி பிரமன் முதன்முதலாகச் சிவனைப் படைத்தனனுதலால் முக்கணீசனுெடு என்றும், பிறகு அடைவே பல தேவதைகளையும் ஸ்ருஷ்டித்தனனுதலால் தேவுபலநுதலி என்றும் அருளிச்செய்தார். ஆக, ஸத்வாரகஸ்ருஷ்டியாலே உண்டாக்கின ஸகலவஸ்துக்களுக்கும் மூலகந்தம் திருநாபியாகையாலே மூவுலகம்விளைத்தவுந்தி என்றார். இப்படிப்பட்ட திருவுந்தியையுடைய மாயக்கடவுளுண்டு—ஆச்சரியமான ஞானசக்திகளையுடையனுன ஸர்வேச்வரன், அவனுடைய திருவடிகளை, ஊழிதோறூழி யோவாது வாழியவென்று யாந்தொழ விசையுங்கொல்.

அந்தத்திருவடிகளை ச்ரமப்படுத்திக் காரியங்கொண்டவர்களைப்போலே நாமும் ஆகாமல் அவற்றுக்குப் பல்லாண்டுபாடப் பெறவேணும். வாழிய—வியங்கோள்வினைமுற்று. .... (ச)

மாமுத லடிப்போதொன்று கவிழ்த்தலர்த்தி *
மண்முழுதுமகப்படுத்து - * ஒண்சுடரடிப்போ
தொன்று விண்செலீஇ * நான்முகப் புத்தேள்
நாடு வியந்துவப்ப * வானவர் முறைமுறை
வழிபட நிறீஇ * தாமரைக்காடு
மலர்க்கண்ணொடு கனிவாயுடையது
மாய் * இருநாயிறாயிரம் மலர்ந்தன்ன *
கற்பகக்காவு பற்பலவன்ன *
முடிதோ ளாயிரம் தழைத்த *
நெடியோய்க்கல்லது மடியதோ வுலகே. (௫)

மா முதல் அடி போது ஒன்று	(உலகத்துக் கெல்லாம்) மூலாதாரமாகிய திருவடிகளில் ஒன்றை
கவிழ்த்து அலர்த்தி	நிலமட்டமாகப் பரப்பி
மண் முழுதும்	பூமியை யெல்லாம்
அகப்படுத்து	திருவடிக் குள்ளடக்கி ஸ்வாதீனப்படுத் திக்கொண்டும்
ஒண் சுடர் அடி போது ஒன்று	அழகிய தேஜஸ்ஸு நிறைந்த மற் றொரு திருவடித் தாமரையை
நான்முகன் புத்தேள் நாடு	பிரமதேவனுடைய உலகமானது
வியந்து உவப்ப	ஆச்சரியமும் ஸந்தோஷமும் அடையும் படியாகவும்
வானவர்	மற்றுமுள்ள தேவர்கள்
முறை முறை	சாஸ்திரவிதிப்படி
வழி பட	ஆராதிக்கும்படி யாகவும்
விண் செலீஇ நிறீஇ	ஆகாசத்திலே செலுத்தி நிறுத்தி

தாமரை காடு மலர் கண்ணொடு	தாமரைக்காடு மலர்ந் தாற் போலிருக்கிற திருக்கண்களையும்
கனி வாய்	கொவ்வைக் கனி போன்ற திரு அதரத்தையும்
உடையதும் ஆய்	உடையவனையும்
இரு நாயிறு ஆயிரம் மலர்ந்தன்ன	பெரிய ஆயிரம் ஸூர்யர்கள் சேர்ந்து உதித்தாற்போன்ற
முடி	திருவபிஷேகத்தை யுடையனையும்
பல் பல கற்பகம் காவு அன்ன	பலவகைப்பட்ட கற்பகச் சோலைகள் போலே
தோள் ஆயிரம் தழைத்த	ஆயிரம் திருத்தோள்கள் பணைத்திருக்கப் பெற்றவனையுமுள்ள
நெடியோய்க்கு அல்லதும்	பரம புருஷனை உனக்குத் தவிர (வேறு யார்க்கேனும்)
உலகு அடியதோ	இவ்வுலகம்அடிமைப் படக்கூடியதோ?

* * *—[மாமுதல்.] எம்பெருமான் உலகமளந்த சரிதையை அநுஸந்தித்து, 'இப்படியும் ஒரு ஸௌலப்யமும் ஸௌசீல்யமும் உண்டாவதே!' என்று ஈடுபட்டு ஆச்ரிதர்க்காகத் தன்னை அழிய மாறிக் காரியஞ்செய்கிற மஹோபகாரகனாகிய பரமபுருஷனுக்கன்றி வேறுயாருக்கு இவ்வுலகம் அடிமைப்பட முடியும்? எல்லார் தலையிலும் திருவடிகளைப் பரப்பின தெய்வத்தை நோக்கி "அன்றிவ்வுலகமளந்தாய் அடிபோற்றி" என்று மங்களாசாஸநம் பண்ணுகை ஏற்குமேயன்றி அவன் திருவடிகளின்கீழ் துகைபுண்ட சிலரை நோக்கி 'ஜய விஜயீபவ' என்னக்கூடுமோ வென்கிறார்.

உலகளந்த வரலாறு வருமாறு:—ப்ரஹ்லாதன் தனக்கு வயது சென்றபிறகு தன்னுடைய பகவத்தியானத்திற்கு இடையூறாயிருக்கிற ராஜ்ய பரிபாலனத்தைத் தனது பௌத்திரனாகிய பலியினிடத்தில் ஒப்புவித்துத் தான் தவஞ்செய்யப்போவதாகக் கருதி அந்த மாவலியை ஒரு நாள் ஏகாந்தத்தில் அழைத்து 'நான் வெகுகாலம் அரசாண்டு வந்தேன்; என்காலத்தில் ஒருவரும் அதர்மம் செய்யாதபடி நோக்கி வந்தேன்; ஸ்ரீ விஷ்ணுவே முழுமுதற்கடவுள் என்கிற ஸித்தாந்தத்தை நான் உலகிற் பரவச்செய்து அனைவரையும் விஷ்ணு பக்தர்களாக்கி வந்தேன். இப்போது நான கிழவனாய் விட்டபடியால் விதிப்படி தவஞ்செய்யப்போகின்றேன்; விஷ்ணுத்வேஷியாய் மாண்டுபோன உன் தந்தையை [விரோசனனை]ப் போலல்லாமல் நீ பரம விஷ்ணுபக்தனாயிருந்து ராஜ்யமாளக்கடவை' என்று நன்மதிகூறிப் பட்டங்கட்டித் தான் இமயமலையேறித் தவஞ்செய்யச் சென்றான்.

பிறகு மாவலி அப்படியே சிலநாள் அரசாண்டுவந்து ஒரு நாள் மந்திரிகளை அழைத்து 'நான் சில நன்மைகளையடையத் தவஞ்செய்யச் செல்ல விரும்புகிறேன்; நான் மீண்டு வருமளவும் இந்த ராஜ்யத்தில் விஷ்ணுபக்தி வழுவாதபடி நோக்கி வாருங்கள்' என்று கட்டளையிட்டுத் தான் இமயமலையருகில் போய் நான்முகக் கடவுளை நோக்கித் தவஞ்செய்துகொண்டிருக்கையில் பிரமன் ப்ரஸந்நனாய் வந்து காட்சிதந்து 'வரம்வேண்டிக்கொள்' என்ன, "ஸ்வாமிந்! எனக்கு என் பாட்டனுருபதேசித்த விஷ்ணுபக்தியும் தருமசிந்தையும ஸத்பமும் எப்போதும் வழுவாதிருக்க வேணும்' என்றும் 'மூவுலகத்தையும் நான் வென்று வாழவேணும்' என்றும் இவை முதலான சிலவரங்களை வேண்டிப் பெற்றுக்கொண்ட மாவலி தனது

ராஜதானியாகிய சோணிதபுரத்திற்கு வந்து சுக்கிராசாரியர் முதலிய ஆப்தர்களிடம் தான் பெற்ற வரங்களைச் சொல்லி அவர்களுடன் கூட மகிழ்ச்சியடைந்து ராஜ்யத்தைச் செங்கோல் செலுத்திக்கொண்டு வந்து பலபல யாகங்களையும் மற்றும் பலவிதமான தான தருமங்களையும் செய்துகொண்டு சுக்கிராசாரியரையும் ப்ரஸந்நராக்கி, தான் ஸகல லோகங்களையும் வெல்லத்தக்க வீறுடையனும்படி அவரிடத்திலும் ஆசீர்வாதம் பெற்று அதனால் செருக்குற்று ஒருவரையும் மதியாமல் திரிந்துகொண்டிருந்தான்.

சிலநாள் கழிந்தபின் ஸ்வர்க்கலோகத்தையும் வென்று ஆளவேண்டுமெனக் கருதி சுக்கிராசாரியரை யழைத்து 'நீர் ப்ருஹஸ்பதியிடஞ் சென்று நான் சொன்னதாகச் சொல்லும்; அதாவது—ஓ ப்ருஹஸ்பதி ! உமக்கு இந்திரனைப்போல் நானுமொரு சிஷ்யனே; எங்கள் குலத்தில் ஹிரண்யகசிபு ஆண்டுவந்த ஸ்வர்க்கலோகத்தைப் பின்பு ஒருவரும் ஆளத்தக்க பலசாலிகளாகப் பிறவாமையால் இந்திரன் பிடித்துக்கொண்டான்; இப்போது அதனை ஆளுகைக்கு எனக்கு வல்லமையுண்டு; ஆகையால் இப்போது அதை எனக்கு விட்டுவிடவேண்டியது; இல்லையாகில் போர்செய்யவேண்டியது; இதற்கு இந்திரன் என்ன சொல்லுகிறானோ அதை உணர்ந்து சொல்லும்' என்று சொல்லியனுப்பினான். சுக்கிரனால் இதுகேட்ட ப்ருஹஸ்பதியும் இந்திரனோடு ஆலோசித்து ஒருமாதத்திற்குள் விடையளிப்பதாகச் சொல்லி சுக்கிரனை அனுப்பிவிட்டார். பிறகு இந்திரன் ஒன்றுந்தோன்றாமல் ப்ருஹஸ்பதியையுங் கூட்டிக்கொண்டு பிரமனிடஞ் சென்று செய்தியைச சொல்ல, அதுகேட்ட நான்முகன் 'வரங் கொடுப்பதற்கு மாத்திரமே எனக்கு அதிகாரமுளது; கொடுத்த வரத்தினால் கெடுதி நேரிடுங்காலத்தில் வேறொரு உபாயத்தினால் அதை மாற்ற எனக்கு வல்லமை இல்லை' என்ன, பிறகு சிவனிடஞ் சென்று முறையிட, அச்சிவபிரானும் 'பிரமன் தந்த வரத்தை நான் அழிக்கவல்லேனல்லேன்; விஷ்ணுவிடஞ் சென்று முறையிடுதல் நன்று' என்று சொல்லிவிட, அவர்கள் விஷ்ணு பக்கலில் வந்து சொல்லிக்கொள்ள, அதற்கு விஷ்ணு 'ஓ ப்ருஹஸ்பதே! மாவலி எனக்குச் சிறந்த பக்தன், மிக்க தருமசிந்தையுள்ளவன், திடீரென்று அவனை நான் ஒன்றுஞ் செய்யலாகாது; தக்க உபாயத்தை நீங்களே ஆராய்ந்து சிறிதுகாலங் கழியுங்கள்' என்று சொல்லிவிட்டு மறைந்தார்.

முன்பு சுக்கிரனிடம் ப்ருஹஸ்பதி சொல்லியிருந்த ஒரு மாத அவதி கடந்துவிட, ஸ்வர்க்கலோகத்தினின்றும் ஒரு ஸமாசாரமும் வரக்காணாமையால் மாவலி தன் படைகளை யெடுத்துவிட்டு ஜயபேரி முழங்கப் புறப்பட்டு இந்திரனோடு போர் புரிவதென்று ஸ்வர்க்கஞ் சென்று அங்கு ஒருவரையுங் காணாமல் அங்குள்ள சிங்காசனத்தின் மீது தான் ஏறி வீற்றிருந்து இந்திரனைப்போல் மூன்று உலகங்களை யும் ஆண்டுவந்தான். அப்போது மூன்றுலகங்களிலுமுள்ள ஸகல பிராணிகளும் விஷ்ணுபக்தராயினர். தருமம் குறைய றநடைபெற்று வந்தது. ஒருநாள் ப்ருஹஸ்பதி மாவலியிடம் வந்து 'அரசனே! நீர் சுக்கிரனை வைத்துக்கொண்டு அரசுபுரியும்; நான் தவஞ்செய்யப் போகிறேன்' என்ன, அதற்கு மாவலி 'இந்திரனாக வருபவர்கட் கெல்லாம் உம்மைப் புரோஹிதராக ஸ்ரீமஹாவிஷ்ணு நியமித்திருக் கிறபடியால் இவ்விடம் விட்டு நீர் போகலாகாது' என்ன, அத ற்கு அவர் 'நூறு அச்வமேதயாகஞ் செய்து எவனொருவன் இந்திர பட்டத்திற்கு வருகிறானோ அவனுக்கு நான் புரோஹிதனும்படி விஷ்ணு நியமனமேயன்றி, கிரமமாக இருந்த இந்திரனை அச்சமுறுத் தித் துரத்திவிட்டு இந்த ஸ்தானத்திற்கு அநீதியாக வந்திருக்கிற உமக்கு நான் புரோஹிதனாக மாட்டேன்' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுக் கச்யபருடைய ஆச்ரமத்திற்கு வந்து அவருடைய தரும பத்தினியாகிய அதிதி தேவியிடத்தில் இந்திரனுடைய துக்கச் செய்திகளை யுரைக்க, அவள் கேட்டு மனம் பொறாமல் அழுது கொண்டு தன் புத்திரனாகிய இந்திரனுக்கு நன்மைகள் உண்டாகும் படி விஷ்ணுவிடம் பிரார்த்திக்க விரும்பி பகவானைத் துதித்துக் கொண்டிருக்கையில் ப்ரஸந்நரான ஸ்ரீ மஹாவிஷ்ணு அதிதியின் முன்னே வந்து ஸேவைஸாதித்து அவளுடைய கோரிக்கையை அறி ந்துகொண்டு 'அம்மா! நான் உனக்குப் பிள்ளையாகப் பிறந்து இந் திரனுடைய துயரத்தைப் போக்குகிறேன்' என்று சோதிவாய் திறந்து அருளிச்செய்து மறைந்துவிட்டார்.

பிறகு சிறிது காலங்கழிந்தபின் அதிதி கர்ப்பந்தரித்து வாமன னைப் பெற்றனள். கச்யபர் அப்புதல்வனுக்கு ப்ராஹ்மண ஸம்ஸ் காரங்களை யெல்லாம் கிரமமாகச் செய்வித்தார். வாமனனும் தபஸ் வியாக இருந்துவந்தான். அக்காலத்தில் மாவலி நர்மதாநதியின் கரையில் வைஷ்ணவயாகஞ் செய்யமுயன்று யாகத்தை நடத்திக் கொண்டிருக்கையில் இவ்வாமனன் 'இந்திரனுக்கு நாம் உதவி செய்ய

இதுவே தக்க ஸமயம்' என்றெண்ணி அங்கிருந்து புறப்பட்டு மாவலியின் யாகசாலைக்குச் சென்றார். பரமவிலக்ஷணமான திருக்கோலத்தைக்கண்ட மாவலி பெருமகிழ்ச்சிகொண்டு வாமனனை உபசாரபூர்வகமாக ஆஸனத்தில் இருத்தி வந்தகாரியத்தை விநயத்துடன் விசாரிக்க, வாமனன் 'ஓ மன்னவனே! நான் தவஞ்செய்ய விரும்புகிறேன்; பிறருடைய நிலத்திலிருந்து தவஞ் செய்தால் பயனில்லையாகையால் எனக்கு அறுதியாக என் காலால் மூவடி மண் தரவேண்டும்' என்ன, அதுகொடுப்பதற்கு அவன் இசைந்தவுடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தை அளாவி வளர்ந்து ஓரடியால் பூலோகத்தையும் மற்றோரடியால் மேலுலகத்தையும் அளந்து மூன்றாமடிக்காக அவன் இசைவின்படியே அவன் முடியிற் காலைவைத்து அவனைப் பாதாளத்திலழுத்தி அடக்கினன்—என்பதாம்.

மாமுதல்—என்பதைத் திருவடிக்கு விசேஷணமாக்கி உரைப்பதன்றி அண்மைவிளியாகக் கொண்டு, உலகங்கட்கெல்லாம் ஆதிகாரணனான எம்பெருமானே! என்று ஸம்போதநமாக உரைத்தலும் ஒக்கும். போது—புஷ்பம்; அதாவது தாமரைப்பூ. அடிப்போது—பாதாரவிந்தம். அதைக் கவிழ்த்துப் பரப்பிப் பூமண்டலம் முழுவதையும் ஸ்வாதீநப்படுத்திக்கொண்டானாயிற்று.

சேவீஇ—செலுத்தி; சொல்லிசையளபெடை. "வானவர் முறைமுறை வழிபட நெறீஇ" என்றே பெரும்பாலும் ஓதுகின்றனர். நிறீஇ என்றபாடமும், நிறுத்தி என்று அதற்குப் பொருளும் அஸ்மதாசார்யர் அருளிச்செய்தது. நெறீஇ என்ற பாடமும் பொருந்தும்; வியாக்கியானத்திற்கும் இணங்கும். வானவர்—தேவர்கள், நெறீஇ—நல்வழிப்பட்டு, முறைமுறை—சாஸ்திர விதிப்படி, வழிபட-ஆராதிக்கும்படியாகஎன்று பொருளாகக் கடவது. நெறீஇ—இறந்தகால வினையெச்சம். நெறி—பகுதி; இ—இறந்தகால வினையெச்ச விகுதி; இகரம் ஈகாரமானதும் அளபெடுத்ததும் நீட்டலும் விகாரம். நான்முகப்புத்தேள்=புத்தேள் என்று தெய்வத்திற்குப் பெயர்; நான்முகன்+புத்தேள், நான்முகப்புத்தேள்; பிரமதேவன் என்றபடி. அவனுடைய நாடு வியந்து உவப்ப என்றது—அவனுடைய நாட்டிலே உள்ளவர்கள் 'தாமரை போல் பரமபோக்யமான ஒரு திருவடி இங்கே வந்து ஸேவை ஸாதிப்பதே!' என்று ஆச்சரியமும் ஸந்தோஷமும் அடைய என்றபடி.

தர்மரைக்காடு என்று தொடங்கி உலகளந்த பெருமானுடைய சில அவயவங்களையும் திருவபிஷேகத்தையும் வருணிக்கிறது. இப்படி விலக்ஷணனான பரமபுருஷனுக்குத் தவிர மற்று யார்க்கேனும் அடிமைப்பட உரியதோ இவ்வுலகம்?

நெடியோன் என்பதன் முன்னிலை நெடியோய் என்பது. (ரு)

ஓஓ உலகினதியல்வே * ஈன்றோளிருக்க
மணைநீராட்டி * படைத்திடந்துண்டுமிழ்ந்
தளந்து * தேர்ந்துலகளிக்கும் முதற்பெரும்
கடவுள் நிற்ப * புடைப்பல தானறி
தெய்வம் பேணுதல் * தனாது
புல்லறிவாண்மை பொருந்தக்காட்டி *
கொல்வனமுதலா வல்லன முயலும் *
இனையசெய்கை யின்புதுன்பளி *
தொன்மாமாயப் பிறவியுள் நீங்கா *
பன்மா மாயத்தழுந்துமா நளிர்ந்தே. (சு)

உலகு	லோகங்களை
படைத்து	ஸ்ருஷ்டித்தும்
இடந்து	(ஒருகால் வராஹாவதாரத்தில்) உத்தரித்தும்
உண்டு	(மற்றொருகால் பிரளயம்வந்தபோது வயிற்றிலே வைத்து நோக்கியும்
உமிழ்ந்து	பிறகு வெளிப்படுத்தியும்
அளந்து	(பின்னுமொருகால் த்ரிவிக்ரமனாய்) ஸ்வாதீனப்படுத்திக்கொண்டும்
தேர்ந்து	இப்படியாகவே இன்னும் பல ரக்ஷண வழிகளைச் சிந்தித்துக் கொண்டு
அளிக்கும்	(முக்காலங்களிலும்) ரக்ஷித்துக்கொண்டேயிருக்கின்ற
முதல் பெரு கடவுள் நிற்ப	ஸர்வகாரணனும் பராத்பரனுமான ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளியிருக்கவும் (அவனை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்க மாட்டாமல்)
புடை	ஏதோ வொரு மூலையில் சொல்லப்பட்டும்
தான் அறி	தான்தோன்றித்தனமாக அறிந்து கொள்ளக் கூடியவும்
பல	பலவகைப்பட்டுமிருக்கிற
தெய்வம்	தேவதைகளை
பேணுதல்	ஆராதிப்பது,

தனது	தன்னுடைய
புல் அறிவாண்மை	நீசபுத்தியை
பொருந்த காட்டி	விளங்கக் காட்டிக் கொண்டு
ஈன்றாள் இருக்க மணை நீராட்டி	பெற்ற தாய்க்கு ஒரு உபசாரமும் பண்ணாதே விட்டிட்டு அறிவற்றதொரு மணைக்கட்டைக்கு உபசாரம் பண்ணுவது போல—,
கொல்வன முதலா	ஆடு பலிகொடுத்தல் கோழி பலி கொடுத்தலாகிற ஜீவஹிம்ஸை முதலான
அல்லன முயலும்	தப்புக்காரியங்களைச் செய்ய நினைக்கையாகிற
இனைய செய்கை	இப்படிப்பட்ட காரியங்களா யிராநின்றன;
அளி	(அந்த க்ஷுத்ரதெய்வங்களின்) ப்ரஸாதமோ
இன்பு துன்பு	ஸுகமென்று பேர் மாத்திரமான துக்கம்;
(அதாவது என்னெனில்;)	
தொல்	அநாதியாய்
மா	மஹத்தாய்
மாயம்	ஆச்சரியமான
பிறவியுள்	ஸம்ஸாரத்தில் நின்றும்
நீங்கா	ஒருநாளும் நீங்குதலின்றிக்கே
பல் மா மாயத்து	பலவகைப்பட்ட வ்யாமோஹ ஜநகங்களான சப்தாதிவிஷயங்களிலே
நளிர்ந்து அழுந்தும் ஆ	ஆழ அழுந்திக் கிடப்பதாம்;
ஓஒ உலகினது இயல்வு	இப்படிப்பட்ட லோகஸ்வபாவம் என்ன பரிதாபம் ஐயோ! (என்கிறார்.)

* * *—“முடிதோளாயிரந்தழைத்த நெடியோய்க்கல்லது மடியதோவுலகே” என்று கீழ்ப்பாட்டிலருளிச்செய்த ஆழ்வார் தம்முடைய கொள்கைப்படியே உலகமனைத்தும் எம்பெருமானை வணங்கி வழிபட்டு உஜ்ஜீவிக்கின்றதா என்று ஆராய்ந்துபார்த்தார். க்ஷுத்ர பலன்களை விரும்பி க்ஷுத்ரதேவதைகளை ஆராதிக்கின்ற க்ஷுத்ர ஜனங்களே மிகுதியாகக் காணப்பட்டன; பரிதாபம் பொறுக்கமாட்டாமல் ஐயோ! ஐயோ !! இப்படியும் உலகம் பாழாய்ப் போவதே ! என்று வயிற்றிலும் தலையிலும் அடித்துக்கொள்ளுகிறார்—ஓ ஓ என்று கதறுகிறார். இப்படி இவர் ஓ ஓ என்று கதறுகிற கதறல் எவ்வளவு தூரம் கேட்குமென்னில், இவர் தாம் கீழ்ப்பாட்டில் பேசின மேலுலகளந்த திருவடி எவ்வளவுதூரம் சென்றதோ, அவ்வளவிலும் மேலாகவே சென்று ஒலிக்குமென்று கொள்ளீர்,

இவ்வுலகின் ஸ்வபாவத்தை நாம் என்ன சொல்லுவோம்!; இவ்வுலகம் செய்கிற காரியம் என்னவென்றால், நன்றி கெட்ட காரியஞ் செய்யாநின்றது. பிள்ளையைப் பெறுவதற்குமுன்பு பலவகைக் கஷ்டங்கள் பட்டும் பெற்றபின்பும் குறையற ஸம்ரக்ஷிப்பதற்காக எத்தனையோ வருத்தங்கள் பட்டும் நன்மையே செய்து போருகிற மாதாவுக்குப் பலவகை உபசாரங்கள் செய்யவேண்டியது ப்ராப்தமாயிருக்க, அவளைத் திரஸ்கரித்துவிட்டு உபயோகமற்றவொரு மணைக்கட்டையை ஆதரித்து அதற்குக் கொண்டாட்டங்கள் செய்வாரைப்போலே இவ்வுலகத்தவர்கள், பலவகை உபகாரங்களும் செய்து போருகிற எம்பெருமானை அநாதரித்துவிட்டு ஒரு நன்றியும் செய்யமாட்டாத அசேதநப்ராயங்களான புதுத்தெய்வங்களைக் கொண்டாடுகின்றார்களே ! இது விவேகமிருந்து செய்கிற காரியமோ? அறிவு உள்ளவர்கள் இப்படியுஞ் செய்வார்களோ? எம்பெருமான் இவ்வுலகுக்குச் செய்த உபகாரங்களை இன்று நான் புதிதாகச் சொல்லவேண்டுமோ? இறகு ஒடிந்த பக்ஷிகளைப்போலே கரண களேபரங்களை யிழந்துகிடந்த இவ்வாத்துமாக்களைக் கரண களேபரங்களோடே கூட்டினதும், ஹிரண்யாக்ஷன் பாயாகச் சுருட்டிக்கொண்டுபோன இந்நிலவுலகத்தை மஹா வராஹமாகி மீட்டுக் கொணர்ந்ததும், இவ்வுலகமெல்லாம் பிரளயப் பெருங்கடலில் நசித்துப்போக நேர்ந்தகாலத்துத் திருவயிற்றிலே வைத்து ஸம்ரக்ஷித்ததும், பிரளயங்கழிந்தவாறே பழையபடி வெளியிட்டதும், மாவலியிடத்து நீரேற்றுப் பெற்றுத் தாளின்கீழ் ஆட்படுத்திக்கொண்டதும் முதலான உபகாரங்கள் சொல்லி முடியுமோ? இப்படிப்பட்ட உபகாரங்கள் இன்னும் எத்தனையோ செய்வதாகத் திருவுள்ளம்பற்றி யிருப்பவனன்றோ திருமால். அவனைத்தவிர வேறொரு முழுமுதற்கடவுள் இவ்வுலகுக்கு உண்டோ? நன்றியறிவுள்ளவர்கள் அப்பெருமானுக்கன்றோ பணிவிடைகள் செய்ய ப்ராப்தம்; அவனுக்குச் செய்யாததோடு ஒரு நன்றியுஞ் செய்யமாட்டாத தேவதாந்தரங்களுக்குப்போய்ப் பணிவிடை செய்கிற இவ்வுலகின் அவிவேகத்தை என்ன சொல்லுவோம்? அந்த தேவதாந்தரங்களுக்கு இவர்கள் செய்கிற ஆராதனம் என்னவென்றால் ஆட்டை வெட்டிப் பலியிடுவதும் கோழியைக் கொன்று நைவேத்யஞ் செய்வதும் இவைபோல்வன ஜீவஹிம்ஸைச் செயல்களேயாம். இதற்குப் பலனாக அந்த தேவதைகள் கொடுப்பது என்னவென்றால், இந்த

ஸம்ஸாரத்திலேயே தரைப்பட்டு அழுந்தி உழல்வதற்கு உறுப்பான ஆபாஸ ஸுகங்களேயாம். உண்மையில் இவை ஸுகங்களல்ல; துக்கமேயாம். இப்படிப்பட்ட துக்கங்களைப்பெற விரும்பி இவ்வுலகம் ப்ராப்த தேவதையைவிட்டு தேவதாந்தர பஜநம் பண்ணித் திரிகின்றதே! அநியாயமாய் அநர்த்தப்பட்டுப் போகின்றதே! இதனில் மிக்க பரிதாபமுண்டோ? என்றாராயிற்று.

ஈன்றோளிருக்க மணைநீராட்டி—"பேயிருக்கு நெடுவெள்ளம் பெருவிசும்பின் மீதோடிப் பெருகுகாலம், தாயிருக்கும் வண்ணமே உம்மைத் தன் வயிற்றிருத்தி உய்யக்கொண்டான், போயிருக்க மற்றிங்கோர் புதுத்தெய்வங் கொண்டாடுந் தொண்டீர் * பெற்ற தாயிருக்க மணை வெந்நீராட்டுதிரோ மாட்டாத தகவற்றீரே" என்ற திருமங்கையாழ்வார் ஸ்ரீஸூக்தியும் இதனையடியொற்றியதே. மணை நீராட்டி—மணை என்றது அசேதநவஸ்துக்களை யெல்லாம் சொன்னபடி. நீராட்டி என்றது உபசாரங்கள் பலவற்றையுஞ் சொன்னபடி. 'மணைநீராட்டுமா போலே' என்று சொல்லவேண்டுமிடத்து (அவாய் நிலையாக) உவமையை உள்ளடக்கி மணைநீராட்டி என்றே சொன்ன தன் கருத்து யாதெனில்; தேவதாந்தர பஜநம் பண்ணுவதோடு மணை நீராட்டுவதோடு ஒரு வாசியில்லை; இதுதான் அது, அதுதான் இது என்று இரண்டுக்குமுள்ள அபேதத்தைக் காட்டினபடியாம்.

மாதர்கள் ப்ரஸவித்தவுடனே பெற்ற அத்தாயையும் பிறந்த சிசுவையும் ஸ்நாநஞ்செய்வித்தல் மலைநாட்டு வழக்கமாக வெகு முற்காலத்தில் இருந்ததாம். ப்ரஸவித்தவுடனே தாயை நீராட்டுவது பலவகைக் கஷ்டங்களுக்குக் காரணமாவதால் அத்தாய்க்குப் பதிலாக ஒரு மணைக்கட்டையை ஸ்நானஞ்செய்விப்பது இடைக்காலத்து வழக்கமாக இற்றைக்கும் நடந்து வருகின்றதாம். அதனைத் திருவுள்ளம்பற்றி இங்கு ஆழ்வார் இப்படி அருளிச்செய்தார் என்று சிலர் சொல்லுவர்.

புடைப்பலதானறி தெய்வம்பேணுதல்—புடைஎன்றது ஏதோவொரு பக்கம் என்றபடி. வேதத்தில் ஏதோ ஒரு மூலையில் சிவன் என்றும் ருத்ரன் என்றும் ஹிரண்யகர்ப்பன் என்றும் சில பதங்கள் கிடந்தால் அவற்றின் ப்ரகரணத்தையும் பொருளையும் தெரிந்து கொள்ளாது அந்த தேவதைக்குப் பரத்துவஞ் சொல்லியிருப்ப

* [பெரிய திருமொழி 11-6-6]

தாகக் கொள்வார்களே சிலர்; அதைச் சொல்லுகிறது. ஆனது பற்றியே தானறிதெய்வம் என்றுஞ் சொல்லப்பட்டது. புத்ரகாமனுக்கு ஒரு தெய்வம், ஐச்வரிய காமனுக்கு ஒரு தெய்வம், ஆரோக்ய காமனுக்கு ஒரு தெய்வம் என்றிப்படி அவரவர்கள் பற்றும் தெய்வங்கள் பலபலவாயிருப்பதுபற்றிப் பலதேய்வம் பேணுதல் என்றார்.

தனது என்பது 'தனது' என்று நீட்டல் விகாரம் பெற்றுக் கிடக்கிறது. 'புல்லறிவாளன்' என்று விவேகமற்றவனைச் சொல்லுகிறது; புல்லறிவாண்மையாவது அவிவேகம். கோல்வன முதலா அல்லன = இவ்வாழ்வார் தாமே திருவாய்மொழியில "தீர்ப்பாரையாமினி" என்ற திருவாய்மொழியில் "நீர் எதுவானுஞ் செய்து அங்கோர் கள்ளும் இறைச்சியுந்தூவேல்மின்" என்றும், "நீர்கருஞ் சோறும் மற்றைச் செஞ்சோறும் களனிழைத் தென்பயன்" என்றும், "அணங்குக் கருமருந்தென்றங்கோர் ஆடுங் கள்ளும்பரூய்" என்றும், "எதம்பறைந்து அல்ல செய்து கள்ளூடு கலாய்த்தூய், கீதமுழவிட்டு நீரணங்காடுதல் கீழ்மையே" என்றும் அருளிச் செய்தவை இங்கு அநுஸந்திக்கத்தகும்.

இன்புதுன்புஅளி = அளிப்பது அளி; அதாவது கொடுக்கும் வஸ்து; தேவதாந்தரங்கள் தரும் பொருள் யாதெனில், இன்பு துன்பு = இன்பாவது ஸுகம், துன்பாவது துக்கம்; ஸுகமென்று ப்ரமிக்கக்கூடிய துக்கமென்றவாறு. ஸம்ஸாரத்தில் கிடைக்கும் ஸுகங்களெல்லாம் இப்படிப்பட்டவையேயாம். பிள்ளை பெறுவது செல்வம் பெறுவது என்னுமிவை மேலெழப்பார்க்கையில் ஸுகமாகத் தோன்றி, வரவரத் துன்பமாகவே முடிகின்றமையைப் பன்னியுரைக்குங்காற் பாரதமாம்.

தேவதாந்தர பஜனம் பண்ணுவது நித்ய ஸம்ஸாரியா யொழிவதற்கு க்ருஷிபண்ணுவதேயன்றி வேறில்லை யென்பதைக் கூறி முடிக்கிறார் தோன்மாமாயப் பிறவியுள்நீங்காப் பன்மாமாயத் தழுந்துமா நளிர்ந்தே என்று. (சு)

நளிர்மதிச் சடையனும் நான்முகக்கடவுளும் ⁕
தளிரொளி யிமையவர் தலைவனும்முதலா ⁕
யாவகையுலகமும் யாவருமகப்பட ⁕
நிலநீர் தீகால் சுடரிரு விசும்பும் ⁕
மலர்சுடர்பிறவும் சிறிதுடன் மயங்க ⁕

ஒருபொருள்புறப்பாடின்றி முழுவது
மகப்படக் கரந்து - * ஓராலிலைச் சேர்ந்தவெம்
பெருமாமாயனையல்லது - *
ஒருமாதெய்வம் மற்றுடையமோ யாமே. (எ)

திருவாசிரியம் முற்றிற்று.

ந்ளிர் மதி சடையனும்	குளிர்ந்த சந்திரனை ஜடையிலே யுடைய சிவனும்
நான்முகன் கடவுளும்	பிரமதேவனும்
தளிர் ஒளி இமையவர் தலைவனும் முதலா	தழைத்த ஒளிபொருந்திய தேவேந்திரனும் ஆகிய இவர்கள் முதலாக
யாவரும்	எல்லாப்பிராணிகளும்
யாவகை உலகமும்	எல்லாவுலகமும்
அகப்பட	உட்பட,
நிலம் நீர் தீ கால் சுடர் இரு விசும்பும்	பூமி ஜலம் அக்நி வாயு, தேஜஸ் ஸுக்களை யுடைய மஹத்தான ஆகாசம் ஆகிய பஞ்ச பூதங்களும்
மலர் சுடர் பிறவும்	சந்திரன் ஸூர்யன் முதலிய மற்றும் சிறந்த தேஜஸ் பதார்த்தங்களும்
உடன்	ஏககாலத்தில்
சிறிது	சிறியதான திரு வயிற்றின் ஒரு பக்கத்திலே
மயங்க	கலசும்படியாக
ஒரு பொருள் புறப்பாடு இன்றி	ஒரு வஸ்துவும் வெளிப்படாதபடி
முழுவதும்	எல்லாப் பொருள்களையும்
அகப்பட கரந்து	உள்ளேயிட்டு மறைத்து
ஓர் ஆல் இலை சேர்ந்த	அத்விதீயமானவொரு ஆலந்தளிரிலே யள்ளிகொண்ட
எம்	எமக்கு ஸ்வாமியாய்
பெரு மாமாயனை அல்லது	மிகப்பெரிய ஆச்சரியங்களை யுடையனை ஸ்ரீமந்நாராயணனைத்தவிர்த்து
மற்று ஒரு மா தெய்வம்	வேறொரு க்ஷுத்ர தேவதையை
யாம் உடையமோ	நாம் சேஷியாகக் கொள்ளுவோமோ? (கொள்ளமாட்டோம்.)

* * *—ஸகல சேதநர்களும் ஸ்வரூபப்ராப்தசேஷியான எம்பெருமானை அடிபணிந்து அவனுக்கே வழுவிலாவடிமைகள் செய்ய ப்ராப்தமாயிருக்க அப்படி செய்யாதே தேவதாந்தரங்களை ஆச்ரயித்து ஸம்ஸாரத்தையே பூண்கட்டிக்கொள்ளுகிறார்களே! அந்தோ! இஃது என்ன அநர்த்தம்! என்று கீழ்ப்பாட்டில் கவலைப்பட்டார். ஒரு ஸம்ஸாரியாவது இவருடைய துயரத்தைப் பரிஹரிக்க முன்

வராமற்போகவே, 'இப்பாழும் ஸம்ஸாரிகள் எக்கேடாவது கெடட்டும்; நாமும் அவர்களைப்போலே அநர்த்தப்பட்டுப் போகாமல் எம்பெருமானுக்கே அடிமைபட்டிருக்கப் பெற்றோமே!' என்று தம்முடைய மனவுறுதிக்கு உகந்து பேசுகிறார் இதில்.

ஸம்ஸாரிகள் பற்றுகிற தேவதாந்தரங்கள் யாவும் நம்மைப் போலவே பலவகை ஆபத்துக்களுக்கு உள்ளாகி எம்பெருமானுடைய திருவருளால் தப்பிப்பிழைப்பவர்களே யொழிய, பிறருடைய ஆபத்துக்களைத் தாம் பரிஹரிக்கவல்ல ஸர்வ சக்தர்களல்லர் என்பதை விளக்கவேண்டி 'இந்தத் தெய்வங்களெல்லாம் பிரளயகாலத்தில் எம்பெருமானது திருவயிற்றிலே பதுங்கிக்கிடந்தவை காண்மின்' என்கிறார். எல்லாத் தெய்வங்களையும் உய்யக்கொண்ட பரமபுருஷனை ஸ்ரீமந்நாராயணனுக்கன்றி மற்றுயார்க்கும் நாம் அடிமைப்பட்டவர்களல்லோம் என்பது நிகமனம்.

நளிர்மதிச்சடையனும் என்றவிடத்துப் பெரியவாச்சான்பிள்ளையருளிச்செயல்:—"ஸாதக வேஷம் தோற்ற ஜடையைத் தரித்துக் கொண்டிருக்கச் செய்தேயும் துர்மானத்தாலே ஸுகப்ரதாநன் என்று தோற்றும்படி தாழை மடலைக் கீறித் தலையிலே வைப்பாரைப் போலே குளிர்ந்த சந்த்ரனை ஜடையிலே தரித்த ருத்ரனும்" என்று. இதில் "தாழைமடலைக்கீறி" இத்யாதி த்ருஷ்டாந்த வாக்கியத்திற்குப் பொருள் யாதெனில்; உலகில் மூட்டை சுமந்து வருந்திக் கூலி ஜீவனம் பண்ணுகிறவர்கள் தாங்கள் கஷ்டப்படுகிறவர்களென்பது பிறர்க்குத் தெரியாமைக்காகவும் இவர்கள் ஸுகமாக இருப்பவர்களென்று பலரும் நினைத்துக்கொள்வதற்காகவும் தாழம்பூ முதலிய பூக்களை யெடுத்துச் சூடிக்கொண்டு திரிவர்களாம்; அப்படியே சிவபிரானும் தான் ஸம்ஹாரக்கடவுளென்பதையும் ஸாதநாநுஷ்டாநம் பண்ணி ச்ரமப்படுகிறவன் என்பதையும் பிறரறிந்து அருவருக்காமைக்காகவும் 'இவன் உல்லாஸமாக இருக்கக்கூடிய ரஸிகன்' என்று பலரும் நினைத்துக்கொள்வதற்காகவும் அழகிய சந்திரகலையைச் சிரமீது அணிந்தான் போலும் என்று ஒரு விநோதமாக அருளிச்செய்தபடி.

இந்திரன், அரம்பை ஊர்வசி முதலிய அப்ஸரஸ் ஸ்த்ரீகள் தன்னை நன்கு காதலிக்கும்படி அலங்காரங்கள் செய்துகொண்டு அதனால் மேனிநிறம் வீறுபெற்றிருப்பனாதலால் தளிரொளி என்று

விசேஷிக்கப்பட்டான். ஆக முக்கியமாகவுள்ள மூன்று தேவர்களைச் சொல்லவே மற்ற சேதநாசேதநங்களை விவரித்துச் சொல்ல வேண்டாமை பற்றி முதலா யாவகையுலகமும் யாவருமகப்பட என்றார். எம்பெருமானது திருவயிற்றினுள்ளே அடங்கிக்கிடந்து ஸத்தை பெற்ற பதார்த்தங்களை நாம் வாய்கொண்டு சொல்லுவதும் நமக்குப் பெரும் பாக்கியமன்றோ என்றெண்ணி நிலநீர்தீகால் சுடரிருவிசும்பும் மலர்சுடர் என்று மீண்டும் விவரித்துச் சொல்லத் தொடங்கினர் போலும்.

சிறிதுடன் மயங்க என்பதற்குப் பலவகையும் பொருள் கொள்ளலாம்:—(கீழ்ச்சொன்ன வஸ்துக்களெல்லாம்) சிறிது—மிகச்சிறிய வடிவத்தை உடையனவாய்க்கொண்டு, உடன்—ஏககாலத்திலே, மயங்க உள்ளேயடங்கும்படியாக என்பது ஒருவகை. உடன்மயங்க என்றவிடத்து உடல் மயங்க என்று பதம் பிரித்து, சிறிதாகிய உடலிலே—பேதைக் குழவியான எம்பெருமானது மிகச் சிறிய வுடலிலே மயங்க என்றல் மற்றொருவகை. மற்றுங்கண்டுகொள்க. ஆக எல்லாப் பதார்த்தங்களையும் ஒன்று தப்பாமல் திருவயிற்றினுள்ளே அடக்கிக் கொண்டு * "பாலன் தனதுருவாய் ஏழுலகுண்டு ஆலிலையின், மேலன்று நீவளர்ந்த மெய்யென்பர்" என்றபடி சிறுகுழந்தைவடிவமாகி முகிழ்விரியாத சிற்றாலந்தளிரிலே கண்வளர்ந்த அற்புத சக்தி வாய்ந்த ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைத் தவிர்த்து வேறொரு தெய்வத்தை நாம் தெய்வமாகக் கொள்ளோம்.

"நெற்றி மேற்கண்ணனும் நிறைமொழிவாய் நான்முகனும் நீண்டநால்வாய், ஒற்றைக்கை வெண்பகட்டிலொருவனையு முள்ளிட்ட வமரரோடும், வெற்றிப்போர்க்கடலரையன் விழுங்காமல் தான் விழுங்கி உய்யக்கொண்ட, கொற்றப்போராழியான் குணம் பரவாச் சிறுதொண்டர் கொடியவாறே" என்றும், "அன்றெல்லாருமறியாரோ எம்பெருமானுண்டுமிழ்ந்த எச்சில் தேவர், அல்லாதார் தாமுளரே" என்றும் (பெரிய திருமொழியில்) திருமங்கை யாழ்வாரருளிச்செய்த பாசுரங்கள் இங்கே அநுஸந்திக்கத்தக்கவை.

"மங்கைபாகன் சடையில் வைத்த கங்கை யார்பதத்து நீர்? ....அங்கண்ஞாலமுண்டபோது வெள்ளிவெற்பு அகன்றதோ? ஆதலா

* முதல் திருவந்தாதி 79.

லரங்கனன்றி வேறு தெய்வமில்லையே" என்ற பிள்ளைப்பெருமாளையங்கார் விடுதிப்பாசுரமும் குறிக்கொள்ளத்தக்கது.

இத்திவ்யப் பிரபந்தம் பெரும்பாலும் எம்பெருமானுடைய பரத்வஸ்தாபனத்திலே நோக்குடையதென்று உணரத்தக்கது.

திருவிருத்தத்திலும் திருவாய்மொழியிலும் ஆழ்வார் தம்முடைய திருநாமத்தை அருளிச்செய்துளர்; இப்பிரபந்தத்தில் அப்படி அருளிச்செய்யவில்லை என்பதைக் காரணமாகக் கொண்டு சிலர் சொல்லுவதாவது—இத்திருவாசிரியம் இன்னும் பல பாசுரங்களையுடைய பிரபந்தமாயிருந்ததென்றும், காலக்கிரமத்தில் சில பாசுரங்கள் லோபித்துவிட்டனவென்றும் சொல்லுகிறார்கள்; நம்மாழ்வாரருளிச்செய்த நான்கு பிரபந்தங்களுள் இதற்கு அடுத்ததான பெரிய திருவந்தாதியிலும் ஆழ்வாருடைய திருநாமம் அருளிச்செய்யப்பட்டிருக்கவில்லையாகையால் இது சேராது. அந்தாதித்தொடையாக அமைந்த பிரபந்தங்கள் எல்லாவற்றிலும் முடிவு பாசுரத்தின் அந்தமும் முதற்பாசுரத்தின் ஆதியும் ஒன்றாக அமையும்படி அருளிச்செய்யப்பட்டிருப்பதுபோல் இப்பிரபந்தத்தில் அமையாமையால் இதைக்கொண்டு இதில் சில பாசுரங்கள் லோபித்து விட்டனவென்று சொல்லுவர் சிலர்; அதுவும் சேராது; ஈற்றுச் செய்யுளின் அந்தமே முதற்செய்யுளின் ஆதியாக அமையவைத்தல் மண்டலித்தல் என்று தமிழர் சொல்லிவைத்திருக்கையால் இப்பிரபந்தம் மண்டலித்தலாகாது என்று சொல்லலாமத்தனை யொழிய பாசுரங்கள் லோபித்தன என்றல் பொருந்தமாட்டாது. ஆகவே இப்பிரபந்தம் பூர்ணமென்றே கொள்ளத்தக்கது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர்

இயற்றிய

திருவாசிரியம் திவ்யார்த்ததீபிகை

முற்றுப்பெற்றது.